www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1–15 மார்ச் '88

3-8

விலை : ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




# வஞ்சகத் தாக்குதல்

படிப்பகம்

# வாசகர் கடிதம்

www.padippakam.com




அன்புள்ள ஆசிரியருக்கு,

● பத்திரிக்கைகள் மூலமாக வந்த செய்தியின்படி அணுவிசை நீர்மூழ்கிக் கப்பலை இந்தியா ஆக்கப் பணிகளுக்காக வாங்கியதென நினைத்தோம். ஆனால் இப்போதுதான்புரிகிறது, அணுவிசைக் கப்பல் ஆக்கப் பணிகளுக்கானதல்ல, அழிவுப் பாதைக்கானது என்று. இதே போல இலங்கையில் கொலை கொள்ளை, கற்பழிப்பு அட்டூழியங்களை நடத்தி 'வரும் காட்டுமிராண்டி இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளை மூடி மறைத்து அரசாங்கம் கொடுக்கும் செய்திகளை வாந்தியெடுக்கும் பத்திரிக்கைகளை பார்க்கும்போது எரிச்சலூட்டுகிறது. புதிய ஜனநாயகம் போன்ற புரட்சிகர பத்திரிக்கைகள் மூலம்தான் உண்மைகள் பலவற்றை அறிய முடிகிறது. உங்கள் புரட்சிப்பணி தொடரட்டும்.

சிவகுமார் சுவிட்சர்லாந்து

● நான் காரைக்குடியிலிருந்து லெட்சுமாங்குடி செல்வதற்காக தஞ்சை பேருந்தில் பயணம் செய்தேன். புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் வண்டி சிறிது நேரம் நின்றபோது, வண்டியில் ஒரு இளைஞர் ஏறிவந்து தமிழக சட்டமன்ற அராஜகத்தை எடுப்பாக விளக்கி புதிய ஜனநாயகம் இதழை விற்பனை செய்தார். முதன் முதலாக ஒரு ரூபாய் கொடுத்து இதழை வாங்கினேன். சட்டமன்ற ரவுடித்தனங்களை துல்லியமாக விளக்கி விமர்சித்த உங்களுக்கு எனது பாராட்டுக்கள். புதிய ஜனநாயகம் மேன் மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

தேவன் லெட்சுமாங்குடி

● பிப்ரவரி 1—15 இதழில் 'சட்டமன்ற ரௌடித்தனங்கள் என்ற தலைப்பிட்டு உண்மைச் சம்பவத்தை ஒளிவு மறைவு இன்றி எழுதியமைக்கும், ஆடை தயாரிப்பு நிறுவனங்களின் அயோக்கியத்தனத்தை உறுதியோடு வெளிக்கொணர்ந்தமைக்கும் புரட்சிகர வாழ்த்துக்கள்.

வ. காமராஜ் நெய்வேலி

● ஜன 1—15 இதழின் அட்டைப் படத்தில் துக்ளக் கார்ட்டூனுக்கு மாறாக வேறு கார்ட்டூன் போட்டு நமது தனித்தன்மையை நிலைநாட்டியிருக்கலாம். 'ஜனநாயகம் தீர்வாகுமா?' என்ற கட்டுரை சிறப்பாக இருந்தது. இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அந்நாட்டு புரட்சிகர சக்திகளுக்கு அனுப்பலாம். எம்ஜிஆரை இடி அமினுடன் ஒப்பிட்டு ஒரு பாசிஸ்டின் மரணம் எப்படி இமயைவிட இலேசானது என்பதை விரிவாக எழுதியது சிறப்பானது. கண்ணீர் வடிக்கும் நரிகளின் ஓலங்களுக்கு மத்தியில் எம்ஜிஆரின் மக்கள் விரோத 'சாதனைகளை' தோலுரித்துக் காட்டி, அரசியல் ஆண்மையை நிலைநாட்டிய புதிய ஜனநாயகத்துக்குப் புரட்சிகர வாழ்த்துக்கள்!

ஜனவரி 16—31 இதழில் விலையேற்றம்: ஈழப்போரின் நேரடி விளைவு என்ற தலையங்கக் கட்டுரை சிறப்பாக இருந்தது. 'குமாஸ்தா குபேரரான கதை' எளிமையாகவும் கதை வடிவில் சிறப்பாகவும் இருந்தது.

வாசகர் வட்டம் திருச்சி

● நாட்டில் நடக்கும் அநியாயங்களை துணிச்சலாகவும், உண்மை நிலையை வெட்டவெளிச்சமாகவும் வெளியிடும் ஒரே புரட்சிகர ஏடு புதிய ஜனநாயகம்தான்! திராவிடப் பாரம்பரியம் தேசிய பாரம்பரியம் என்று சொல்லி மக்களை ஏய்த்து நாற்காலிச் சண்டையில் இறங்கி வரும் ஓட்டுக் கட்சிகளை மேலும் பதவியில் அமரவிடுவோமானால் சட்டமன்ற ரௌடித்தனங்கள் தொடரவே செய்யும்.

சண்முகம் வடபாதிமங்கலம்

● ஆளும் வர்க்க எடுபிடிகள் பாராளுமன்ற ஜனநாயகத்தை எவ்வளவுதான் புனிதமானதாக காட்ட முயற்சித்தாலும் ஓட்டுக் கட்சிகளின் பிழைப்புவாத நடவடிக்கைகளால் அவ்வப்போது அம்பலப்பட்டே வந்துள்ளது. அதிகார வர்க்கத்துடன் கூட்டுச் சேர்ந்து எலும்புத்துண்டுக்காக நாயாய் அலையும் ஓட்டுப் பொறுக்கிகளின் ஆரவார கூத்துக்கள் 'பாராளுமன்றம் ஒரு பன்றித்தொழுவம்' என்ற அறிவியல் வார்த்தைக்கு மகுடம் சூட்டுகிறது.

ஜீவா ஊற்றங்கரை

● பிப்ரவரி 1—15 இதழில் 'உள்ளூராட்சித் தலைவர்களா?' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை, கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத் தலைவர் சூசைராஜின் அடாவடித்தனம் சமூக விரோதச் செயல்களை விளக்கி, ஓட்டுப் பொறுக்கிகள் பொதுமக்களின் சொத்துக்களை சூறையாடுவதற்கு சட்டபூர்வ அனுமதி பெறுவதுதான் தேர்தல் என்பதை மக்கள் உணரும் வகையில் சிறப்பாக இருந்தது. கட்டுரையில் உள்ளூராட்சித் தலைவர் என்பதற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியத் தலைவர் என்று தெளிவாக குறிப்பிட்டிருக்க வேண்டும்.

அகேட் கரம்பக்குடி

● ஆடை தயாரிப்பு நிறுவனங்களின் கொள்ளைச் சுரண்டலையும் அவதிப்படும் பெண் தொழிலாளர் நிலையையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள். இதில் சில தொழிற்சங்கங்களின் துரோகத்தனத்தையும் குறிப்பிட்டுள்ளீர்கள். தொழிலாளிகளை வழி நடத்திச் செல்லும் புதியதலைமை எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்? அடக்குமுறைக் காலத்தில் எப்படி போராட வேண்டும் என்பதை உதாரணங்களுடன் விளக்கி தனி கட்டுரையாக வெளியிட்டால் சிறப்பாக இருக்கும்.

ஆர். காந்தி சென்னை-4

● புனிதம் எங்கே போனது என்ற தலையங்கம் சிறப்பு. சட்டமன்ற ரௌடித்தனங்கள் என்ற கட்டுரை மூலம் சட்டமன்றத்தில் புரண்டு எழுந்த பன்றிகளை அம்பலமாக்கியிருந்தது அருமை. ஐந்து மாநிலங்களில் ராணுவ ஆட்சி என்ற கட்டுரை பொங்கியெழும் தேசிய சுயநிர்ணய உரிமைப் போரை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது. இதுதான் இன்றைய இந்தியா, முத்தாய்ப்பாக முடிவாக இந்த சமூக அமைப்பு இனிமேலும் நீடிக்கக்கூடாது என்பதை வாசகர்கள் மனதில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

வாசகர் வட்டம் விக்கிரமசிங்கபுரம்

'புதிய ஜனநாயகம்' பற்றிய அறிக்கை
4 வது பாரம் (8-ம் பிரிவுப்படி)

1. வெளியிடும் இடம் — சென்னை
2. வெளியிடும் காலம் — மாதம் இருமுறை
3. அச்சிடுபவர் — எம். கே. சாமி
இந்தியரா? — ஆம்
முகவரி — பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சூளைமேடு, சென்னை-600 094.
4. வெளியிடுபவர் — எஸ் மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15.
5. ஆசிரியர் — எஸ். மதியழகன்
இந்தியரா? — ஆம்
முகவரி — 21, பாலாஜிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
6. உரிமையாளர் — எஸ், மதியழகன், 21, பாலாஜிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15.

எஸ். மதியழகனாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தெரிந்தவரை உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

—ஒப்பம் எஸ். மதியழகன் (வெளியிடுவோர்)



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

8

1—15 மார்ச் '88

தனி இதழ் : ரூ. 1
ஆண்டுச் சந்தா : ரூ. 24

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்:

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதியஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை-600015

## ரயில்வே-தபால் கட்டண உயர்வு:
# பாசிச கும்பலின் பகிரங்கத் தாக்குதல்!

பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காகப் போராடும் பலம் வாய்ந்த ஒரு அமைப்பு இல்லாத நிலையில், வழக்கமான எதிர்க்கட்சிகள் பத்திரிக்கைகளின் கண்டன ஒப்பாரிகளை ஆட்சியிலுள்ளவர்கள் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை; மக்கள் மீதான சுமையை ஏற்றிக் கொண்டே போவதற்கு எந்தத் தடையும இருக்காது. இந்தத் துணிச்சலுடன் இந்த ஆண்டு விலையேற்றம், கட்டண உயர்வு, வரிவிதிப்புகளைத் தாராளமாகத் தொடங்கி உள்ளது ஆளும் பாசிச ராஜீவ் கும்பல். ஆண்டுக்கு ஒருமுறை வரவு செலவுக் கணக்கு—பட்ஜெட் என்ற அரசியல் சட்டவிதியைக் கேலிக் கூத்தாக்கி பல தவணைகளில் பொருளாதார ரீதியிலான தாக்குதல்கள் தொடுப்பதை மரபாக்கிக் கொண்டு விட்டது.

வருடத் துவக்கத்திலேயே முதல் தவணையாக நிலக்கரி, எஃகு, பெட்ரோல் உயர்வு மூலம் 1200 கோடி ரூபாய் சுருட்டிக் கொண்டது மத்திய அரசு. பொது வரவு—செலவு கணக்கு சமர்ப்பிக்கும் முன்பாக ரயில்வே, தபால்—தந்தி மற்றும் தகவல்தொடர்புகட்டண உயர்வு மூலம் 1,171 கோடி ரூபாய் அளவுக்கு சுமைஏற்றியுள்ளது. மாத இறுதியில் பொது வரவு—செலவு கணக்கில் வரவிருக்கும் பெரும்சுமை ஏற்றத்துக்கு இவை முன்னோடியானவைதான்!

முதலாளித்துவ அரசியல் பொருளாதாரவாதிகளேகூட நம்பும்படியான காரணங்களைக் கூறமுடியாமல் பச்சைப் புளுகுணி வாதங்களை வைத்துத்தான் பாசிச ராஜீவ் கும்பல் இவற்றை நியாயப்படுத்த முயல்கிறது. புதிய திட்டங்களுக்கும், நவீனப்படுத்துதல் மற்றும் விரிவாக்கத்துக்கும் முதலீடு சேர்க்கவே கட்டண உயர்வுகள், வரிவிதிப்புகள் என்று சமாதானம் கூறுகிறது. ஆனால் இவற்றுக்காக சொற்ப தொகையே ஒதுக்கப்படுகின்றது; அன்றாட, நிர்வாகச் செலவுகளும், திட்டங்களுக்கு அப்பாற்பட்ட ஊதாரித்தனங்களுமே பெருமளவு விழுங்கி ஏப்பம் விடுகின்றன.

சான்றாக, ரயில்வே பட்ஜெட்டில் 622 கோடி ரூபாய்க்கு கட்டண உயர்வு விதித்திருப்பினும் கடந்த ஆண்டைவிட 96 கோடி ரூபாய்தான் புதிய முதலீடாக உள்ளது. 925 கோடி ரூபாய் அளவு அன்றாட நிர்வாகச் செலவு உயர்ந்துள்ளது. நாலாவது சம்பள கமிஷன் சிபாரிசுபடி ஊழியர் ஊதிய உயர்வுதான் இதற்குக்காரணம் என்று அரசு கூறுகிறது. ஆனாலும் சென்ற ஆண்டைக் காட்டிலும் ரயில்வே கட்டண வருமானம் 968 கோடி உயர்ந்துள்ளது. ஆகவே மாதாந்திர பயணிகள், பிளாட்பாரம் மற்றும் இரண்டாம் வகுப்பு பயணிகள கட்டணம் ஆகியவற்றையும் அக்கிரமாக உயர்த்தியுள்ளது பாசிச ராஜீவ் கும்பல். அதே போல உள்நாட்டு தபால், கவர், பணவிடை மற்றும் தொலைபேசிக் கட்டண உயர்வும் செய்துள்ளது.

மக்கள்மீது சுமையேற்றிவிட்டு அவர்களை ஏய்ப்பதற்காக ஆணவமான, கோமாளித்தனமான சில வேலைகள் செய்கிறது. உலகெங்கும் பெட்ரோலியம் விலை குறையும்போது இரண்டாவது தவணையாக விலையேற்றம் செய்துவிட்டு பெட்ரோல் பயன்படுத்துவது 15 சதவீத அளவு உயரவிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தவே விலையேற்றம் என்று கூறுகிறது. தபால் கட்டணத்தை உயர்த்திவிட்டு காகிதம் முதலிய தபால்கள் தயாரிப்புக்கான கட்டண உயர்வு தான் என்று கூறிக் கொள்கிறது. ரயில் கட்டணத்தை ஏற்றிவிட்டு பயணிகளுக்குச் சலுகைகள் செய்வதாக அறிவிக்கிறது. அதாவது "பயங்கரவாதிகள், தீவிரவாதிகளுடனான மோதலில்" சா(வு)கும்போலீசாரின் மனைவிமார்கள், ஜனாதிபதி விருது பெறுவோர் போன்றவர்களுக்கு ரயில் பயண சலுகைகள் அறிவித்து ஆளும் கட்சி மேஜையைத் தட்டி வரவேற்கிறது.

இதே போல பொது வரவு செலவுக்கணக்கில் பெரும்சுமை ஏற்றப்படும் என்று முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் கணிக்கிறார்கள். ஆனால் அதிலும் ஆடம்பரப் பொருட்களுக்கும், பணக்காரர்களுக்கும் வரி—தீர்வை விதிப்பு, ஏழை எளிய மக்களுக்கு சலுகைகள் என்கிற கவர்ச்சி—ஏமாற்று நாடகம் நிச்சயம் இருக்கும். செல்வாக்கிழந்த பாசிச ராஜீவ் கும்பல் அடுத்த ஆண்டு தேர்தலைக் குறிவைத்தே இந்த வேலையைச் செய்யும்.

பெருமளவு பற்றாக்குறை வரவு செலவு கணக்குக் காட்டிவிட்டு பல்வேறு தவணைகளில் மக்கள்மீது சுமைமீண்டும் ஏற்றும். இலங்கை ஆக்கிரமிப்பு, இராணுவ ஆயுத தளவாட செலவுகள் அதிகரிப்பு, ராஜீவ் கும்பலின் ஆடம்பரம் உட்பட திட்ட வரைவுக்கு அப்பாற்பட்ட ஊதாரித்தனம், தொடர்ந்து நீடிக்கும் வறட்சி—வெள்ளம் ஆகியன மக்களமீது பாசிச ராஜீவ்கும்பல் ஏற்ற இருக்கும் பொருளாதாரச் சுமையை அதிகரிக்கவே செய்யும். தேர்தல் அரசியல் கட்சிகளின் கண்டன அறிக்கைகள், நாடாளுமன்ற வெளிநடப்புகள் ஆகிய வழக்கமான சவசவத்துப் போன எதிர்ப்புகள் இதைத் தடுக்க முடியாது. தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு வெளியே, சக்திவாய்ந்த மக்கள் இயக்கத்தின் எதிர்த் தாக்குதலே பாசிச ராஜீவ் கும்பலின் பொருளாதார ரீதியிலான தாக்குதலுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# பொறுக்கி அரசியல்!

பொறுக்கி அரசியல் என்பது
நாடாளுமன்ற ஜனநாய்கத்தின்
தர்க்கரீதியான இழிந்த இறுதி நிலை.
காந்தியம், இந்து ராஷ்டிரம், இனவாதம்,
போலி சோசலிசம், போலி கம்யூனிசம் ஆகியவை
அம்பலப்பட்டு தோற்றுப்போகும் நிலையில்
நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு
பொறுக்கி அரசியல் ஆளுமைக்கு வருகிறது.

இப்போது ஆளுமையில் இருப்பது, திராவிட அரசியலோ, தேசிய அரசியலோ அல்ல. பொறுக்கி அரசியல். இப்போது நடக்கும் அரசியல் பேரணிகள், பொதுக்கூட்டங்கள், அவற்றிலே பேசப்படும் வசனங்கள்—வசவுகள், பேசும் தலைவர்கள்—பேச்சாளர்கள், கூடும் மக்கள்—போடும் கோஷங்கள், அவற்றை ஏற்பாடு செய்யும் அணிகள் — பொறுப்பாளர்கள், இந்த விவரங்களை நிரப்பிக் கொண்டு வரும் செய்தித் தாள்கள்—பத்திரிக்கைகள் இவை அனைத்தும் காட்டுவது பொறுக்கி அரசியலின் ஆளுமையைத்தான்!

"நாட்டில் அரசியல் தரம் தாழ்ந்து விட்டது"—என்று ஒரு ஓரத்தில் ஒப்புக்குச் சொல்லிக் கொண்டாலும் மெத்தப்படித்த அறிவாளிகளின் கூட்டம் இந்தப் பொறுக்கி அரசியலைச் சகித்துக் கொள்ளவும், அதனுடன் வாழவும், அதையே ரசிக்கவும்கூடப் பழகி விட்டார்கள். கும்பலை ஈர்ப்பவர்கள் (Crowd Pullers)—கவர்ச்சி நிறை தலைவர்கள் (Cherismatic Leaders)தான் நாட்டை ஆளத் தகுதியானவர்கள், உரிமை உடையவர்கள் என்று பச்சையாகவே ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

"பொறுக்கி அரசியல்" என்று சொல்லும்போது இன்றைய அரசியயின் இழிநிலை கண்டு வெறுமனே வெறுப்பு—விரக்தி, பொறாமை—ஆத்திரத்திலே சொல்லவில்லை. முதலாளித்துவ அரசியலில் ஒரு வகை, ஒரு வடிவம் என்கிற வரையறுப்போடுதான் சொல்லுகிறோம். பொறுக்கி அரசியலுக்கு என்று ஒரு சமூக அடிப்படை, ஒரு சித்தாந்த அடிப்படை, ஒரு அமைப்பு அடிப்படை உண்டு. இன்று தமிழக அரசியலில் முழுமையடைந்த வடிவில் பொறுக்கி அரசியல்பிரகாசிக்கிறது. பொறுக்கி அரசியலைத் தோற்றுவைத்த பெருமை கருணாநிதிக்கு உண்டு; என்றாலும் அதை வளர்த்து முழுமையாக்கியபெருமை எம்ஜிஆருக்குத்தான் உரித்தாகும். செத்த பின்னும் எம்ஜிஆரின் புகழ் பரப்புவது பொறுக்கி அரசியல் தான்.

## பொறுக்கி அரசியலின் சமூக அடிப்படை—உதிரித் தொழிலாளர்கள், கிராமப்புறப் பாமர மக்கள்:

காலனிய ஆட்சிக்கு முன்பிருந்த இந்திய கிராம சமுதாயத்தில் பண்ணை அடிமைகளாகவோ, கொத்தடிமைகளாகவோ, கிராமக் கைத் தொழிலாளர்களாகவோ — ஒரு தொழிலும், வேலையும் கொடுத்து குறைந்தபட்சம் உயிர் வாழ்வதற்கான அடிப்படையாயிருந்தது. காலனிய ஆட்சியும், அதன் பிறகு வந்த காங்கிரசு ஆட்சியும் நகரத்துக் குப்பங்களிலும், கிராமங்களிலும் கோடிக்கணக்கான நிரந்தர வேலையோ, வருமானமோ இல்லாத மக்களைக் குவித்திருக்கிறது. கிராம சமுதாயத்தில் முன்பு கிடைத்த குறைந்தபட்சம் உயிர் வாழ்வதற்கான அடிப்படையும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது.

வருடத்தில் பல நாட்கள் வேலை வாய்ப்புகளின்றி பஞ்சத்திலும், பட்டினியிலும் கிடந்து தவிக்கும் கூலி, ஏழை விவசாயிகளோடு ஓட்டாண்டிகளாகும் நடுத்தர விவசாயிகளும் சேர்கிறார்கள். அரைகுறையாகக் கல்வி பயின்ற இளைஞர்கள். படித்தும் வேலைல வாய்ப்பின்றி, சீரழிந்த கலாச்சாரப் பாதிப்புக்குள்ளான இளைஞர்கள் மூலமாக பொறுக்கி அரசியல் இந்தக் கிராமப்புறப் பாமர மக்களைச்சென்றடைகிறது. ஏற்கனவே நகரத்து குடிசைப் பகுதிகளில் வழியும் உதிரித் தொழிலாளர்களுடன், கிராமப்புறங்களில் இருந்து விரட்டப்படும் விவசாய ஏழை மக்கள் நகரத்து வீதிகளில் குடியேறுகின்றனர்.

பல்வேறு சிறு தொழில்களையும், அன்றாடக் கூலி வேலைகளையும் நம்பி வாழும் இவர்கள் நகர்புற சீரழிவுகளுக்கு எளிதில் பலியாகிறார்கள். அது மட்டுமின்றி கள்ளச் சாராயம், சூதாட்டம், விபச்சாரம் போன்ற சமூக விரோத சீரழிவுகள் கணிசமான உதிரித் தொழிலாளர்களைக் காவு கொள்கின்றன. நிரந்தர வேலையும், வருமானமும் இல்லாத இவர்களை பொறுக்கி அரசியலும் அதன் கவர்ச்சிவாதமும் (பாப்புலிசம்) எளிதில் ஈர்த்துக் கொள்கிறது. பிழைப்புவாதிகள் அவர்களுக்குத் தலைமையளித்து அணிதிரட்டிக் கொள்கிறார்கள்.

## பொறுக்கி அரசியலின் சித்தாந்த அடிப்படை: கவர்ச்சி வாதம் (பாப்புலிசம் populism)

பிற்போக்கு சித்தாந்தங்களை வெளிப்படையாக வைத்து பரந்துபட்ட மக்களை இனிமேலும் ஈர்க்க முடியாது என்கிற அரசியல் ஓட்டாண்டித்தனம் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு ஏற்படுகின்றன.

*பொறுக்கி அரசியலின் தமிழக கதாநாயகி; தொண்டர்களுக்கு பால்கனியிலிருந்து தரிசனம் தருகிறார்.*





படிப்பகம்

www.padippakam.com

ஆனால் ஆட்சியைப் பிடிப்பதற்கு அவை ஒரு உத்தியைக் கையாளுகின்றன. தமது பிற்போக்கு சித்தாந்தங்களை மூடி மறைத்துக் கொண்டு பாமர மக்களின், குறிப்பாக உதிரித் தொழிலாளர்கள், ஒட்டாண்டிகளான கிராமப்புற ஏழைகளின் அன்றாடத் தேவைகள், விருப்பங்கள், சுவைகளுக்கேற்ப தமது கொள்கைகளை வகுத்துக் கொண்டு அரசியல்நடத்துகின்றன. தமக்கென்று ஒரு உலகப் பார்வை கொண்ட சித்தாந்தமோ, அதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமையோ உருவாக்கிக் கொள்ள முடியாத இந்தப் பாமர மக்கள் கவர்ச்சிவாதத்துக்குள் மூழ்கி தம்மை அறியாமலேயே பொறுக்கி அரசியலை ஆதரிக்கிறார்கள்.

கவர்ச்சிவாதம் (பாபுலிசம்) என்று சொல்லும்போது எம்ஜிஆர், உருவாக்கியதைப் போன்ற சினிமா கவர்ச்சியை மட்டும் குறிப்பிடவில்லை. அது பொறுக்கி அரசியலின் கலாச்சார வடிவம். எம்ஜிஆர் உருவாக்கிய "அண்ணாயிசம்" பொறுக்கி அரசியலின் கவர்ச்சிவாதத்தின் முக்கியமான சித்தாந்த அங்கமாகும். "முதலாளித்துவம், சோசலிசம், கம்யூனிசம்" மூன்றும் இணைந்ததுதான் 'அண்ணாயிசம்' என்று எம்ஜிஆர் அதற்கு விளக்கம் கொடுத்தார். அவரது விளக்கம் எதுவானாலும் அவரது ஆட்சியின் நடைமுறையிலிருந்து 'அண்ணாயிச'த்துக்கான பொருளை நாம் புரிந்து கொள்ள முடியும்.

தரகு அதிகார முதலாளிகள்மற்றும் நிலப்பிரபுத்துவத்தின் நலன்களைத் தொடர்ந்து கட்டிக் காத்து வளர்ப்பது. அதே சமயம் சோசலிசம், கம்யூனிசம் பற்றிய பாமர மக்களின் மிக மிக மோசமானகருத்துக்கேற்ப கவர்ச்சிவாத(பாப்புலிச) நடவடிக்கைகளை மேற்கொள்வது, இதுதான் எம்ஜிஆர் கடைப்பிடித்த அண்ணாயிசம். தேசியமா, திராவிடமா என்றுஎம்ஜிஆரின் அரசியல் நிலைப்பாடுகளைக்கூட பாகுபடுத்திப் பார்க்க முடியாமல் கவர்ச்சிவாதத்தால் மக்களை அடித்து வீழ்த்துவது; மொழி, இன ஒடுக்குமுறை பாசிச, குரூர, கோமாளித்தனமான ஆட்சி இருந்தாலும் சத்துணவு, பற்பொடி, செருப்பு, வேட்டி, சேலை, தண்ணீர் குடம், வறட்சி, வெள்ளம், தீ நிவாரண அன்பளிப்புகள் ஆகிய இலவசத் திட்டங்களால்நல்லாட்சிநடப்பதாக ஒரு பிரமையை உருவாக்குவது; தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், ஆசிரியர்கள்—அரசு ஊழியர்கள் ஆகிய எந்தச் சமூகப் பிரிவினர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடினாலும் ஈவிரக்கமின்றி நசுக்கும்போதே ஆட்சியாளர்களின் வள்ளல் தன்மையை பறைசாற்றும் "அன்பளிப்பு"களால் வாயடைக்கச் செய்வது. சுருக்கமாகச் சொன்னால் அரசாங்க "இலவச—அன்பளிப்பு"த் திட்டங்களின் கீழ் கணிசமான அளவு மக்களை வைத்துக் கொள்வதன் மூலம் பாமரத்தனமான சோசலிசத் தோற்றத்தை ஏற்படுத்துவது—இதுதான் எம்ஜிஆரின் 'அண்ணாயிசம்—கவர்ச்சிவாதம்.'



பொறுக்கி அரசியல் வேர்விட்டுப் பரவுகிறது. ஜானகி கட்சிக் கூட்டத்துக்கு ரயில் கூரை மீதேறி தொண்டர்களின் யாத்திரை.

## பொறுக்கி அரசியலின் அமைப்பு அடிப்படை: பிழைப்பு வாத அரசியல் அமைப்புகள்:

காந்தியம், இந்து ராஷ்டிரம், அம்பேத்காரிசம், இனவாதம் — போன்ற தேர்தல் அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளைக் கொண்டு அணிகளை—அமைப்புகளைக் கட்டுகின்றன. ஆனால் பிழைப்பு வாதத்தையே அரசியல் கொள்கையாக்கிக் கொண்டுள்ள அரசியல் அமைப்புகள் சிலதோன்றியுள்ளன. அவை தமது தலைவர்கள்—அணிகளின் பிழைப்புவாதத்துக்கேற்ற முறையில் அரசியலையும் போராட்டங்களையும்வகுத்துக் கொண்டு இயங்குகின்றன. விவசாயம், வியாபாரம், ஆலை உற்பத்தி, மருத்துவம், காண்டிராக்ட்—ஒப்பந்தம், சட்டத்துறைபோன்று சம்பாதிப்பதற்கான ஒரு தொழிலாகக் கருதி இயக்கும் அரசியல்—அமைப்புகளையே பிழைப்புவாத அமைப்புகள் என்கிறோம்.

தலைவர்கள் மட்டுமல்ல நகர வட்டங்கள் — கிராமங்களுக்குப் பொறுப்பாக உள்ள கட்சி அணிகள் வரை மேலிருந்து கீழ்மட்டம்வரை பிழைப்பு வாதத்தையே அரசியலாகக் கொண்ட அமைப்புகள். எந்தக் கட்சியில், அதிலும் எந்த கோஷ்டியில் இருப்பது வருமானத்துக்குரிய ஆதாயமாக இருக்கும் என்பதை பரிசீலித்து, விவாதித்து இவர்கள் தெரிவு செய்கிறார்கள். மேல்மட்டத் தலைவர்கள் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் மூலம் கொள்ளையடிக்கிறார்கள். அவர்களுக்குக் கீழே உள்ள பிழைப்பு வாதிகள் அரசியல் தரகு வேலையை ஒரு தொழிலாக அதற்கே உரிய விதிமுறைகளுடன் செய்கிறார்கள்.

தேர்தல் காலங்களில் பிரச்சார வேலைகள், ஆள்பிடிக்கும் வேலைகள், ஓட்டுக்களுக்கான பேரங்கள் ஆகியவற்றில் கட்சி நிதியையே சுருட்டிக் கொள்ளுகிறார்கள். மற்ற காலங்களில் சத்துணவுத் திட்டம் போன்ற இலவசத் திட்டங்கள், வெள்ளம்—வறட்சி—தீ விபத்து போன்ற நிவாரணத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு முன்னின்று அதிகாரிகளுடன் சேர்ந்து கொள்ளையடிக்கிறார்கள். இப்போது இந்த வேலைகள் செய்வதற்காக இவ்வளவு தொகை தமக்குக் கமிஷனாகத் தரவேண்டும் என்று உரிமையோடு அவர்களே எடுத்துக் கொள்ளுகிறார்கள். அரசு கடன் வழங்கும் விழாக்கள், போலீஸ் நிலைய வழக்குகள், வேலை வாய்ப்புகள்—சிபாரிசுகள் போன்றவற்றில் அரசாங்கத்தின் "அங்கீகரிக்கப்பட்ட" தரகர்களாக இருக்கிறார்கள்.

கட்சித் தலைவர்களின் எடுபிடிகளாகவும், அரசியல் தூதர்களாகவும் இருந்த பிழைப்பு வாதிகள் கிராமப் பஞ்சாயத்து, யூனியன், நகராட்சிகள், மக்கள் கமிட்டிகளில் நியமனம் பெறுவது, பிறகு பஞ்சாயத்து, யூனியன், நகராட்சிகளுக்குத் தேர்தல்களில் நிற்பது என்று முன்னேறி எம்எல்ஏக்கள், எம்பிகள் மட்டுமல்ல, மந்திரிகள்



படிப்பகம்

www.padippakam.com

அளவுக்கு உயர்ந்து விட்டார்கள். கூட்டுறவுகள், உள்ளூராட்சிகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களைத் தள்ளி வைத்து இந்தப் பிழைப்பு வாதிகளுக்கான மடங்களாக்கிய எம்ஜிஆர் ஆட்சியில் கோவில்கள், வாரியங்கள், பள்ளி—கல்லூரிகள் போன்ற சகலமட்டங்களிலும் கட்சி பிழைப்பு வாதிகளுக்கு "பொறுப்புகள்" பகிர்ந்தளிக்கப்பட்டன. கட்சிக்காகப் பாடுபடுபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு "ஏற்பாடு" செய்து தருவதைத் தமது பொறுப்பாகவும்—அவர்களது உரிமையாகவும் பகிரங்கமாகவே ஒழுங்குபடுத்தினார் எம்ஜிஆர்.

## பொறுக்கி அரசியல், தமிழகத்துக்கு ஒரு பாரம்பரியம் உண்டு:

பொறுக்கி அரசியலைஅறிமுகப் படுத்தி, நிறுவி வளர்த்ததில் தமிழ்நாட்டுக்கு ஒரு பாரம்பரியப் பெருமை உண்டு. அதன் பிதாமகனும் பெருமைக்குரியவரும் கருணாநிதிதான்! மூப்பனார், வாண்டையார், தென்கொண்டார், மன்றாடியார் போன்ற நிலப்பிரபுக்களின் பண்ணை வீடுகளிலும், கோவை நாயுடுகள், வடபாதி மங்கலம் முதலியார், சென்னை டி.டி.கே—சிவசைலம், மதுரை டிவிஎஸ் போன்ற முதலாளிகளின் விருந்தினர் மாளிகைகளிலும் காமராஜர் தேர்தல் அரசியல் நடத்தி வந்தார். வோட்டர்களைக் கொத்தடிமைகளாக வைத்து சாதி அரசியல் பேரங்கள் மூலமே ஆட்சி நடத்தினார்.

அந்த சாதி அரசியலை வீழ்த்த பொறுக்கி அரசியலால்தான் முடிந்தது. "பேரறிஞர், நாவலர், சொல்லின் செல்வர், கலைஞர், பேராசிரியர்" போன்றவர்கள் மட்டுமே இருந்திருந்தால் காமராஜரின் சாதி அரசியலை வீழ்த்தியிருக்க முடியாது. அதை முறியடிக்க மாவட்டத்துக்கு ஒரு பொறுக்கி அரசியல் தலைமையை உருவாக்கினார் கருணாநிதி. நெல்லைக்கு ஒரு, தூத்துக்குடி சாமி, மதுரைக்கு ஒரு முத்து, திருச்சிக்கு ஒரு அன்பில், தஞ்சைக்கு ஒரு மன்னை, கோவைக்கு ஒரு ராஜமாணிக்கம், சேலத்துக்கு ஒரு வீரபாண்டி, ஆற்காடுக்கு ஒரு ப.உ.ச என்று பொறுக்கி அரசியலுக்குரிய சகல தகுதிகள் கொண்ட தலைமையை உருவாக்கியவர் கருணாநிதி.

அவர்கள் திராவிட அரசியலின் "பழக்கதோஷம்" உள்ளவர்கள்—கருணாநிதிக்கு விசுவாசமாக நின்றுவிட்டவர்கள்—என்ற நிலையில் முழுக்க முழுக்க தமது ரசிகர்களை மட்டும் கொண்ட புதிய பிழைப்பு வாதக் கட்சியை உருவாக்கினார் எம்ஜிஆர். இன்று, வீரப்பன் கும்பலின் முன்னணித் தலைவர்களான முன்னாள் மந்திரிகள், ஜேப்பியார் போன்றவர்கள், ஜெயலலிதா கும்பலின் கருப்பசாமி பாண்டியன், சேடப்பட்டி முத்தையா, சாத்தூர் ராமச்சந்திரன், மதுரை நவநீதகிருஷ்ணன், சென்னை மதுசூதனன், திருநாவுக்கரசு போன்றவர்கள் எம்ஜிஆரின் பொறுக்கி அரசியலின் செல்லப் பிள்ளைகள். இவர்களில் எவருக்கும் திராவிடம், தேசியம்என்கிற பேதமில்லை. "எம்ஜிஆரின் அண்ணாயிசம்"தான் இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள சித்தாந்தம். பிழைப்பு வாதம்தான் இவர்களின் லட்சியம். பொறுக்கி அரசியல்தான் இவர்களின் கொள்கை!

## பொறுக்கி அரசியலில் தேசியவாதிகளும் தஞ்சம் புகுந்தார்கள்.

காங்கிரசின் ஜனநாயக சோசலிசப் பித்தலாட்டத்தை மக்கள் புரிந்து கொள்ளத் துவங்கி 1967 தேர்தலில் பல மாநிலங்களில் தோற்கடித்தனர். மத்தியிலும் சொற்பப் பெரும்பான்மையே பெற்றது. கவர்ச்சி வாதம் (பாப்புலிசம்) தான் காங்கிரசைக் காப்பாற்ற முடியும் என்று முடிவு செய்த இந்திரா மன்னர் மானியம் ஒழிப்பு, வங்கிகள் தேச உடமை, அரசுத்துறை தொழில்களுக்கு முக்கியத்துவம் போன்ற போலி சோசலிச நாடகமாடத் துவங்கினார். மொரார்ஜி, காமராஜ், பாடீல், சஞ்சீவரெட்டி, அதுல்யாகோஷ், சி. பி. குப்தா போன்ற பழம்பெரும் காங்கிரசு பெருச்சாளிகளுக்குப் பதிலாக ஜெகஜீவன்ராம், பக்ருதீன் அலி அகமது போன்ற பிழைப்புவாதத் தலைவர்களை அணிசேர்த்தார். இந்திராவுக்கு மக்கள் செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக பொறுக்கி அரசியல் வழிமுறைகளில் கூட்டம் சேர்க்கத் தலைப்பட்டார். 1971 வங்கதேசப்போரும், தேர்தல் வெற்றியும் ஏற்படுத்திய செல்வாக்கு மங்கி அரசியல் பொருளாதார நெருக்கடிகள் முற்றியது. நாடெங்கும் மக்கள் போராட்டங்கள் வெடித்தபோது அரசு எந்திரத்தைக் கொண்டு அவற்றை அடக்கிய அதே சமயம் பிழைப்புவாதிகளைக் கொண்டு அரசியல் முட்டுக் கொடுத்து காங்கிரசைத் தூக்கி நிறுத்தினார்.

குஜராத், பீகார் போராட்டங்கள் வெடித்து, வளர்ந்து கடைசியாக இந்திரா தேர்தல் செல்லாது என்கிற தீர்ப்பு வந்து அவரது ஆட்சியே ஆட்டங்கண்டபோது, நாடாளுமன்றத்துக்கு வெளியே நேரடியான மோதலில் எதிர்க்கட்சிகள் இறங்கின. இந்திரா காங்கிரசு முழுக்க முழுக்க பொறுக்கி அரசியலில் தஞ்சம் புகுந்தது. பணத்தை வாரி இறைத்து லாரிகளில் ஆள் பிடித்து வந்து இந்திரா வீட்டு முன்பு பேரணிகள் நடத்தப்பட்டன. சஞ்சய்காந்தி இந்திராவின்வாரிசாக மட்டுமல்ல, பொறுக்கி அரசியல் தலைவராகவும் உயர்ந்தார். எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பிழைப்புவாதிகளின் குண்டர்படை கட்டினார். அவசரநிலை ஆட்சியின்போது உள்ளூர் அதிகாரம் அவர்களின் கைகளில்தான் இருந்தது.

அவசரநிலை ஆட்சிக்குப்பிறகு பிரச்சாரங்கள், விளம்பரங்கள்—கூட்ட ஏற்பாடுகள் உட்படஎல்லாத் தேர்தல் வேலைகளும் தொழில் ரீதியில் நடத்துபவர்களுக்கே ஒப்படைத்தது காங்கிரசு. மற்ற தேர்தல் அரசியல் கட்சிகளும் அதைப் பின்பற்றத் தொடங்கின. டெல்லி, பம்பாய் போன்ற பெரும் நகரங்களில் தேர்தல் கூட்டங்களுக்கு (ஆள் சப்ளை) மக்களைத் திரட்டித் தருவதையே தொழிலாகக் கொண்டே கும்பல்கள் உள்

எதிரணியை வீழ்த்த கவர்ச்சிவாதத்தில் தஞ்சம் புகுந்தார் பாசிச இந்திரா





படிப்பகம்

www.padippakam.com



பொறுக்கி அரசியலுக்குப் பலியான நடுத்தர வர்க்கம் ராஜீவின் தேர்தல் வெற்றியைக் கொண்டாடுகிறது.

ன. பீகார், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் கிரிமினல் குற்றவாளிகளே எம் எல் ஏக்கள் மந்திரிகளாகும் அளவுக்குப் பொறுக்கி அரசியல் வளர்ந்து விட்டது.

சஞ்சாய் காந்தியின் பொறுக்கி அரசியலை எதிர்ப்பதாகவும், அரசியல் தரகர்களை ஒழிக்கப்போவதாகவும் ஆட்சிக்கு வந்தபோது சவடாலடித்தார் ராஜீவ். ஃபேர்பேக்ஸ், போபார்ஸ் விவகாரங்கள் அம்பலமாகி ராஜீவின் யோக்கியதைகள் தெரிந்துவிட்ட நிலையில் அவரும்பேரணிகள் நடத்தத்துவங்கி விட்டார். நவீனப்படுத்துவது, தொழில் மயமாக்குவது, திறமை—நிர்வாகத்துக்கு முதலிடம் தரப் போவதாக சவடாலடித்தவர் கவர்ச்சி வாதம் (பாப்புலிசம்) தான் தமது கொள்கையென்று தஞ்சம் புகுந்து விட்டார். பிழைப்புவாத அரசியல் கும்பலிடம் சரணடைந்து விட்டார். எம் ஜி ஆர் பாணியிலான “இலவச அன்பளிப்பு” திட்டங்களுக்காக நிதி ஒதுக்கி தேர்தலைக் குறிவைத்து செயல்படுகிறார். எம் ஜி ஆர் பாணியிலே சினிமா நடிகர்களைக் காட்டி ஓட்டுப் பொறுக்குவதில் இறங்கியுள்ளார்.

## நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த இறுதி நிலை பொறுக்கி அரசியல்:

காமராஜரின் காலத்தில் பண்ணையார்—முதலாளிகள் மாளிகையில் நடந்த சாதி அரசியல் வீழ்த்தப்பட்டு கருணாநிதியின் பொறுக்கி அரசியல் முன்னுக்கு வந்தபோது “பழுத்த ஜனநாயகவாதிகள்” அருவெறுப்பாகப் பார்த்தார்கள். ஆனாலும் அண்ணாத்துரையின் “பெருந்தன்மை” கருணாநிதியின் “நிர்வாகத் திறமை”, பிறகு எம்ஜிஆரின் “மனிதாபிமானம்” ஆகியவற்றைச் சொல்லிக் சகித்துக் கொண்டார்கள். சஞ்சாய் காந்தியின் அவசரநிலை ஆட்டங்கள் அந்தப் பழுத்த ஜன்நாயகவாதிகளுக்கு பீதியூட்டினாலும் ராஜீவ் பதவிக்கு வந்தபோது “பரிசுத்தம்” வந்ததென்று மகிழ்ந்து போனார்கள், இப்போது தமிழ்நாட்டில் வீரப்பன்-ஜெயலலிதா கும்பல்களும், டில்லியில் ராஜீவும் பொறுக்கி அரசியலை முழு வீச்சில் நடத்துகிறார்கள். அது “பழுத்த ஜனநாயகவாதிகளுக்கு” பீதியூட்டுகிறது.

“உலகிலேயே சிறந்தது. நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை; சில பிழைப்புவாதிகள் அரசியலில் புகுந்து கெடுத்து விட்டார்கள். அரசியல் தரம் தாழ்ந்து போய் விட்டது” என்று ‘சமாதானம்’ சொல்லுகிறார்கள், போலிக்கம்யூனிஸ்டு கட்சிகள், ஜனதா, காங்கிரசிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அரசியலுக்கு வெளியிலுள்ள “பழம் தேசபக்தர்கள்” ஆகிய “பழுத்த ஜனநாயகவாதிகள்.” ஆனால் பொறுக்கி அரசியல் என்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தர்க்க ரீதியான இழிந்த இறுதி நிலை. காந்தியம், இந்து ராஷ்டிரம், இனவாதம், போலி சோசலிசம், போலி கம்யூனிசம் ஆகியவை அம்பலப்பட்டு தோற்றுப்போகும் நிலையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு பொறுக்கி அரசியல் ஆளுமைக்கு வருகிறது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் எல்லா போலித்தனங்களையும் வீசி எறிந்துவிட்டு அப்பட்டமான பாசிச சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான சமூக, சித்தாந்த, அமைப்பு அடிப்படையைபொறுக்கி அரசியல் ஏற்படுத்துகிறது. பாசிசத்தை நிறுவுவதற்கு இனவாதம், தேசிய வாதம், போலி சோசலிசம் அடங்கிய சித்தாந்தமாக தேசிய சோசலிசம் அதாவது நாஜிசம்—அமைந்ததைப் போல கவர்ச்சி வாதம் (பாப்புலிசம்) பாசிச ராஜீவ் கும்பலுக்கு உதவும். நாஜிக் கட்சியைப் போல பிழைப்பு வாதிகளைக் கொண்ட காங்கிரசு, எம்ஜிஆர், கருணாநிதி கட்சிகள் அரசியல்—அமைப்பு அடிப்படையைக் கொடுக்கும்.

ஒழுங்கு படுத்தப்பட்ட ஆலை உற்பத்தியில் இருக்கும் தொழிலாளர்கள் பொருளாதாரவாதத்தின செல்வாக்கில் இருக்கிறார்கள். போலிக் கம்யூனிஸ்டுகளின்பிழைப்புவாதக் கொள்கைதான்தொழிலாளர்களைப் பொருளாதார வாதத்துக்குள் தள்ளிவிட்டது. மார்க்சிய—லெனினிய சித்தாந்தத்தைத் திரித்து பாமரத்தனமான சோசல்ச, கம்யூனிச சித்தாந்தத்தைப் போலிக் கம்யூனிஸ்டுகள் பிரச்சாரம் செய்வதனால்தான் பொறுக்கி அரசியலின் கவர்ச்சிவாதம் (பாப்புலிசம்) வெற்றி பெற முடிகிறது. ஆகவே, தொழிலாளர்கள் தலைமையிலான தொழிலாளர்—விவசாயிகள் கூட்டை சமூக அடிப்படையாகவும், மார்க்சிய—லெனினியத்தை சித்தாந்த அடிப்படையாகவும் கொண்ட புரட்சிகர அமைப்பு மட்டுமே பொறுக்கி அரசியலுக்கு மாற்றாக இருந்து அதைமுறியடிக்க முடியும்.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# புதைகுழிக்குத் தள்ளப்பட்ட நெசவுத் தொழில்

இந்தியாவின் மான்செஸ்டர் எனப்படும் அகமதாபாத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 80 மில்கள் மூடிக் கிடக்கின்றன. ஏறத்தாழ ஒரு லட்சத்துக்கும் மேலான தொழிலாளிகள் வீதியிலே வீசியெறியப் பட்டார்கள். கடந்த மூன்றாண்டுகளில் 18 தொழிலாளிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

● அகமதாபாத்தில் இன்று 62 மில்களில் 43 மட்டுமே இயங்குகிறது. இதிலும்கூட லே ஆப் தான். இது தவிர மேலும் 14 மில்கள் சீக்கு பிடித்து மூடுவிழாவுக்கு காத்திருக்கின்றன.

● இங்கிலாந்தில் இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய தொழில் மந்த நிலையைப் போன்ற, அதைவிட தீவிரமான நெருக்கடி ஜவுளித் துறையில் நிலவுகிறது என்று முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே அங்கலாய்க்கின்றனர்.

ஜவுளித்துறை கமிஷனர் அலுவலகத்தின் சமீபத்திய ஆய்வுகளின்படி, 1987 நவம்பர் முடிய நாடு முழுவதும் 126 மில்கள் மூடப்பட்டுள்ளன. 1,70,000 தொழிலாளிகள் வேலை இழந்து தவிக்கின்றனர். மூடு விழாவில் இந்தியாவிலேயே முதலிடம் வகிப்பது தமிழகம்தான். 82 மில்கள் மூடிக் கிடக்கும் குஜராத்துக்கு முன்னோடியாக தமிழகத்தில் 33 மில்கள் மூடிக் கிடக்கின்றன. பம்பாய் நகரில் மட்டும் கடந்த நான்காண்டுகளில் 5 மில்கள் மூடிக் கிடக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் வரும் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் நெசவுத் தொழில் இப்போது மீளமுடியாத நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. உழைக்கத் துணிவிருந்தும் உடலில் வலுவிருந்தும்கூட இந் நெருக்கடிகள் தொழிலாளர்களை வீதியில் நிறுத்தி பிச்சைக்காரர்களாக்கி விட்டன.

நெசவுத் தொழில் நலிவுறுவதற்கான உண்மையான காரணங்களைக் கண்டறிந்து களைவதில் ஆட்சியாளர்களுக்கு அக்கறை இல்லை. முதலாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே 160 சீக்கு பிடித்தமில்கள் இருப்பதாக கூறினர். கனுங்கோ கமிட்டி, கார்வி கமிட்டி, மனுபாய், சிவராமன் கமிட்டிகள் என்றுஅடுத்தடுத்து வந்துஆய்வுகள் செய்தன. உருப்படியாக ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.

நாட்டில் 6 கோடிப் பேருக்கு மேல் ஈடுபட்டுள்ள ஆண்டுக்கு 350 கோடி ரூபாயை வரியாக சுருட்டிக் கொள்ளும் நெசவுத் தொழிலை பல்லாண்டுகளாகப் புறக்கணித்ததன் விளைவுதான் இன்றையநெருக்கடிக்கு முக்கிய கரரணம். இதோடு சீக்கு பிடித்த ஆலைகளின் தொழில் மூலதனத்தை வேறு தொழிலுக்கு மாற்றிக் கொண்ட ஏகபோக முதலாளிகளின் நரித்தனம்; உற்பத்தித் திறனை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் அரசு விதிக்கும் தடைகள்—இவையும் இன்றைய நெருக்கடியை முற்றச் செய்துள்ளன.

அத்தனையும் புதிய ஜவுளிக் கொள்கை என்ற மந்திரக் கோலால் மாற்றிவிடப் போவதாக ஜம்பமடித்தது பாசிச ராஜீவ் கும்பல். ஆனால் ஜூன் '85 ல் புதிய ஜவுளிக் கொள்கை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை 56 மில்கள் மூடப்பட்டுபுதைகுழிக்குப்போனது. சீக்குப் பிடித்த மில்களை தேசியமயமாக்குவது, அரசே ஏற்று நடத்துவது என்ற 'சோசலிச'க் கொள்கையையும் பாசிச ராஜீவ் கும்பல் புறக்கணித்து. பம்பாயில் 13 மில்கள்நொடித்துப்போனதும் அவற்றை அரசு ஏற்பதாக ஒப்புக் கொண்டும் கூட இன்றுவரை அரசுடமையாக்காமல் இழுத்தடிக்கிறது.

அரசுத்துறை நிறுவனமான தேசிய பஞ்சாலைக் கழக மில்களில் உபரியாகத் தொழிலாளர்கள் இருப்பதாகக் கூறி இதுவரை இருபதாயிரம் தொழிலாளிகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டது ராஜீவ் கும்பல். இதோடு இருக்கின்ற தொழிலாளர்கள் மீதும் 50 சதவீத வேலைச் சுமையை ஏற்றி விட்டுள்ளது.

1950ல் நாட்டில் 21,000 விசைத்தறிகளே இருந்தன. இன்று அவை 11 லட்சமாக வளர்ந்து நாட்டின் துணி உற்பத்தியில் 55 சதவீதம் பங்கு வகிக்கின்றன. பம்பாய் பிவாண்டியில் மட்டும் ஆண்டுக்கு 12,000 கோடி ரூபாய் மதிப்புடைய துணி உற்பத்தியாகிறது. ஏறக்குறைய 80 லட்சம் பேர் விசைத்தறித் தொழிலில் பணி புரிகின்றனர். பருத்தி நூல்விலை ஏறத்தாழ 50 சதவீதம் கூடிவிட்டது. அதேசமயம்செயற்கை இழைவிலை வரிச்சலுகைகளால் குறைந்து விட்டது. ஆனால் நவீன ஆலைகளுடன் போட்டி போட முடியாமல் இவையும் சிறுக சிறுக நொடித்துப் போவது நிச்சயமாகி விட்டது. விசைத்தறியின் கோட்டை எனப்படும் பிவாண்டியில் ஏற்கனவே 3 லட்சம் விசைத்தறிகள் துருப்பிடித்துக் கிடக்கின்றன. 10 லட்சம் பேர் வேலையின்றித் தவிக்கின்றனர்.

காந்தியத் தொழில், சுதேசித் தொழில் என்று அரசின் செல்லப் பிள்ளையாக ஆதரிக்கப்படும் கதர் தொழிலும் தொடர்ந்து நீடிக்குமா என்ற நிலைமை உள்ளது. ஓய்வு நேரத் தொழில், குடிசைத் தொழில் என்று கிராமப்புற மக்களின் உழைப்பை உறிஞ்சவும், அதிகார வர்க்கத்தினரும் காந்தியத் தொண்டர்களும் ஆதிக்கம் செலுத்தவும், காந்திய கவர்ச்சி காட்டி ஓட்டுப் பொறுக்கவும் இன்னும் கொஞ்ச காலம் மக்கள் வரிப்பணத்தைக் கொட்டி இந்த தொழிலை எப்படியோ ஆளும் கும்பல் நீட்டிக்கலாம். ஆனால் தொடர்ந்து நீடிக்க முடியாது என்பது நிச்சயமாகி விட்டது.

மூன்று லட்சம் பேர் வேலை செய்யும் 80,000 பனியன் தொழில் நிறுவனங்களிலும் நெருக்கடியின் வீச்சு பரவுகிறது. செயற்கை இழைக்கும், நவீனப் படுத்தலுக்கும் மாறவேண்டியுள்ளதால் இதர மில்களைப் போலவே பனியன் தொழிலும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. திருப்பூரில் படிப்படியாக ஆட்குறைப்பும், வேலைப் பளுவும் அதிகரித்து வருகிறது.

நூல் விலையைக் கண்டித்து சென்னையில் கைத்தறி தொழிலாளிகள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்





படிப்பகம்

www.padippakam.com

நவீன மயமாக்கும் கொள்கை நெசவுத் தொழிலாளர்கள் மீதான பெருந்தாக்குதல். நவீனமயமாக்குவதன் மூலம் நெசவுத் தொழில் நெருக்கடியைத் தீர்த்துவிட முடியுமா? அப்படியொன்றும் இல்லை என்பதையே ஆய்வுகள் அறைந்து கூறுகின்றன நூலிழையின் விலை மிக உயர்வாக இருக்கும் வரை நவீன மயமாக்குவது பொருளாதார ரீதியில் பின்னேற்றத்தையே தரும்.

அதிவேகமாக ஓடும் தறிகள், தானே சரி செய்து கொள்ளும் (வைண்டிங்) சுருள் இயந்திரங்கள், கம்ப்யூட்டர் இயக்கிக் கட்டுப்படுத்தும் இயந்திரங்கள், முதலானவற்றைப் புகுத்தியதால் அமெரிக்காவிலேயே 1949—57 ஆகிய எட்டாண்டுகளில் 28 சதவீதம் அதாவது 3,40,000 தொழிலாளிகள் வேலை இழந்தனர். இந்தியாவில் நவீனமாக்கல் காரணமாக ஏற்கனவே 50,000 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். புதிய ஜவுளிக் கொள்கை நடைமுறைப் படுத்தப்பட்ட பிறகு ஏறத்தாழ 2 லட்சம் தொழிலாளர்கள்வேலையிழந்து வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர்.

தரகுப் பெரு முதலாளிகளின் மில்களை நவீனப் படுத்த ஏற்கனவே 275 கோடி ரூபாயை ராஜீவ் கும்பல் ஒதுக்கியது. அதன் பிறகு செயற்கை இழைக்கு வரிச் சலுகை கொடுத்து விலைக் குறைப்பு செய்தது. தொடர்ந்து கோடி கோடியாக சலுகைகளும் மானியங்களும் வாரியிறைத்தது. இந்தச் சலுகைகள்கூட தரகுப்பெரு முதலாளிக்குத்தான் கிடைத்தது. சிறுமுதலாளிகள் மற்றும் தேசியமுதலாளிகள் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டனர். மில்களை நவீனப் படுத்த முடியாமல் போன முதலாளிகள் நொடித்துப்போயினர். நவீனப் படுத்த அரசு உதவவில்லை என்று கூறி படிப்படியாக தொழிலாளர்களை வெளியேற்றியும், தொழிற்சிக்கைக் காட்டி ஆலைகளை மூடியும் நெருக்கடியிலிருந்து தப்பிக்க முயலுகின்றனர்.

அறுபதாம் ஆண்டுகளில் தோளிலே கைத்தறித் துணிகளைச் சுமந்து வீதி வீதியாய் குடும்பம் குடும்பமாய் அலைந்தது போன்றதொரு அவலநிலை மீண்டும் வந்துவிட்டது. நூறு கோடி ரூபாய்க்கும் மேலான கைத்தறி துணிகள் தேங்கிக் கிடக்கின்றன.

ஒரு கோடிப்பேருக்கும் மேலாக கைத்தறி தொழிலாளர்கள் நெருக்கடியால் தரித்திர நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். விசைத் தறிக்கு மாறி விடுகிறோம்; கடன் கொடுங்கள் என்று கைத்தறி முதலாளிகள் பாசிச கும்பலிடம் கெஞ்சியும்கூட கையில் காசிருந்தால் மாறிக் கொள்ளுங்கள் என்று



பலகோடி நெசவுத்தொழிலாளிகளை பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டு, தரகு அதிகார முதலாளிகளின் வளர்ச்சிக்குநவீனப்படுத்துகிறார்கள்

முகத்திலடித்துவிட்டது பாசிச கும்பல். இத்தனையும் போதாது என்று நூல்விலையையும் உயர்த்தி கைத்தறி தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கிறது. நூல் விலையைக் குறைக்கக் கோரி தர்ணாவும், ஊர்வலமும், கடையடைப்பும், கவர்னரிடம் மனுவும் கொடுத்தும்கூட அசைந்துகொடுக்க மறுக்கிறது அரசு.

கைத்தறி மட்டுமல்ல, பருத்தித் துணி—நூல் சார்ந்த தொழில்கள் அனைத்துக்கும் பேரிடி கொடுத்துள்ளது புதிய ஜவுளிக் கொள்கை. பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு, வேறு பயிருக்கு மாறிக் கொள்ளவும் சாத்தியமில்லாமல் ஓட்டாண்டிகளாகி விட்டார்கள். விவசாயத்திற்கு அடுத்து நாட்டின்பழம்பெரும் தொழிலான, 20 சசவீத மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான நெசவுத் தொழிலை நாசமாகிவிட்டது புதிய ஜவுளிக் கொள்கை.

போலிக் கம்யூனிஸ்டுகளின் பல்லாண்டுகால தொழிற்சங்கவாத நடைமுறையால் தொழிலாளர்கள் பிழைப்புவாதப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கிறார்கள். கொட்டை போட்ட போலிக் கம்யூனிஸ்டுகளையும் விஞ்சிவிட்ட பம்பாய்தத்தா சமந்த், கோவை ஜனதா—எச் எம் எஸ் தலைவர்கள் மற்றும் அகமதாபாத் தொழிற்சங்கத் தலைவர்களே இன்று நெசவுத்தொழிலாளர்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளனர். கரடு தட்டிப்போன போராட்ட முறைகளால் இவர்கள்ஏற்கனவேகாயடிக்கப்பட்ட நிலையில் கிடக்கின்றனர். பெயரளவிற்கான எதிர்ப்பு, ஊர்வலம், தர்ணா என்பதற்குமேல் அவர்கள் போவதில்லை.

சமீபத்தில் கைத்தறி தொழிலாளர்கள் கொதித்தெழுந்து போராடத் துவங்கியதும் ஓட்டுப் பொறுக்கும் நப்பாசையில், 'கைத்தறி தொழிலாளிகளுக்கு ஆதரவாக போராட்டத்தில் குதிப்போம்' என்று திடீர் கரிசனம் காட்டுகிறது திமுக. இந்த அளவுக்குக்கூட போராட முன்வராமல் முதுகெலும்பின்றி முடங்கிக் கிடக்கிறதுபோலிக் கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கத் தலைமை.

இது ஏதோ நெசவுத் தொழிலாளர்களை மட்டுமே பாதிக்கக் கூடியது; நமக்கு சம்பந்தம் இல்லை என்று உழைக்கும் மக்கள் ஒதுங்கியிருக்க முடியாது. உழைக்கும் மக்களின் உண்மை ஊதியம் வீழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால் வாங்கும் சக்தியை வேகமாக இழந்து வருகின்றனர். புதிய ஜவுளிக் கொள்கையால் 'மலிவு' விலையில் தயாராகும் செயற்கை இழைத் துணிகளை மீட்டர் 60 ரூபாய் கொடுத்து வாங்குவதென்பது உழைக்கும் மக்களின் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம்.

இத்தாலிய மருமகன் பாசிச ராஜீவுக்கு புகுந்த விட்டின் அந்தஸ்துக்கு ஏற்ப தேசத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்று ஆசை. அதற்காக தேசவிரோத மக்கள் விரோத புதிய ஜவுளிக் கொள்கையை அறிவித்து அமுலாக்குகிறார். பலகோடி நெசவுத் தொழிலாளிகளை பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டு, பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளின் கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிட்டு, தரகு அதிகார முதலாளிகளின் வளர்ச்சிக்கு நவீனப்படுத்தலைப் புகுத்துகிறார். இனியும் பாசிச கும்பலைவிட்டு வைத்தால் நெருக்கடிகள் நிரந்தரமாகவே செய்யும். தேசிய முதலாளித்துவ வளர்ச்சிக்கும் அதே சமயம் உழைக்கும் மக்களின் அதிகார கட்டுப்பாட்டிற்குட்பட்ட நவீன மயமாக்கலே இந்நெருக்கடிகளைத் தீர்க்கவல்லது. ஏகாதிபத்திய எதிர்ப்பு பாசிச எதிர்ப்பு வெகுஜனப் புரட்சியே இதைச் சாதிக்கவல்லது. பாதிக்கப்பட்ட நெசவுத் தொழிலாளர்களோடு உழைக்கும் மக்கள் ஐக்கியப்பட்டு, ஓட்டுக்கட்சிகளைப் புறக்கணித்து புரட்சிகர தலைமையின்கீழ் போராடுவதொன்றே இதற்கான வழி.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

'இன்ஷா அல்லாஹ்!' முஸ்லிம்களின் புனிதஸ்தலமான மெக்காவின் வீதியில் யாத்ரீகர்களிடம் அவன் கையேந்தி பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். ஆறு மாதங்களுக்கு முன்பு அவனும் ஹஜ் யாத்திரை மேற்கொண்டு ஆண்டவன் அருள் பாலிப்பார் என்று நம்பித்தான் மெக்காவுக்கு வந்தான். ஆனால் அவனோ காஃபிர்; உடல் ஊனமுற்ற ஏழை இந்தியச்சிறுவன். அன்னிய நாட்டில் வந்து இப்படி பிச்சை எடுக்கப்போகிறோம் என்று அவன் கனவிலும் நினைத்ததில்லை. 'ஹஜ்யாத்திரை போனால் உங்கள் மகனின் ஊனமான கால்கள் நன்றாக விளங்கும்' என்று ஆசை காட்டி, தன் சொந்த செலவில் மெக்காகவுக்கு அழைத்து வந்து இங்கே பிச்சை எடுக்கும்படி சித்திரவதை செய்யும் குண்டர்களை நினைக்கும் போதே அவனுக்கு உடல் நடுங்கியது. மனதிற்குள் அவர்களைத் திட்டித் தீர்த்தான். "அல்லாவே, எனக்கு நல்வழியைக் காட்டு" என்று இறைஞ்சினான்.

அதோ, அடுத்த தெருவில் அவனைப் போலவே இன்னும் பல குழந்தைகள் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவன், அக்தார். மூளை வளர்ச்சியில்லாத கால் ஊனமான சிறுவன். இவனைக் கடத்தி வந்த குண்டர்கள் செய்த சித்திரவதையால் 'ஐயா, தருமம் போடுங்க!' என்பதைத் தவிர வேறு எதையுமே அவனுக்குப் பேசத் தெரியவில்லை. சற்று தொலைவில் நின்று பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறான் சுனாருல் எனும் சிறுவன். அவன் பிறவியிலேயே செவிடு ஊமை. 'பே, பே' என்று ஓயாமல் கத்திக் கொண்டு பிச்சைப் பாத்திரத்தைத் தட்டித்தட்டி யாத்ரீகர்களிடம் தருமம் கேட்கிறாள் இவள், மும்தாஜ். எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்ட ஏழை இந்தியச் சிறுமி. ஓயாத இருமலுக்கு நடுவேயும் அவள் உதடுகள் பிச்சை கேட்டுக் கொண்டிருக்கிறது.

மெக்கா. இன்று அது முஸ்லிம்களின் புனிதஸ்தலமல்ல. காஃபிர்களின் உலகம். ஒவ்வொரு தெருவுக்கும் ஒரு ரௌடி பொறுப்பு.

# மெக்காவுக்குக் கடத்தப்படும் இந்தியஏழைக் குழந்தைகள்!

அவன் கட்டுப்பாட்டின் கீழ் பிச்சையெடுத்து வரும் அப்பாவிச் சிறுவர்கள்! சமீபத்தில் சௌதி அராபிய அரசு மெக்காவிலுள்ள பிச்சைக்காரர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தபோது, பிடிபட்ட பிச்சைக்கார சிறுவர்களில் இருவர் இந்தியர்கள் என்று அறிந்து அவர்களைத் திருப்பியனுப்பியது.

திரும்பி வந்த அப்துல் வகாப், லால்ன் எனும் இச்சிறுவர்கள் கூறிய தகவல்கள் அதிர்ச்சியூட்டக் கூடியவை. ஐந்து மாதங்களுக்கு முன்பு சபீர் என்ற இளைஞன் இச்சிறுவர்களின் பெற்றோர்களிடம் வந்து, "ஒரு முறை ஹஜ்யாத்திரை போய் வந்தால் உடல் ஊனமுற்ற இவர்கள் தமது துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவார்கள்" என்று கூறி ஒரு தனவந்தரின் தயவில் இவர்களை மெக்காவுக்கு அழைத்துப் போய் வருவதாக ஆசை காட்டினான். சபீர், அதே ஊரைச் சேர்ந்தவன் என்பதால் நம்பிக்கையோடு, இச்சிறுவர்களை அனுப்பி வைத்தார்கள் அவர்களின் பெற்றோர்கள்.



அக்தார் அலி: குண்டர்களின் சித்திரவதையால் 'ஐயா, தருமம் போடுங்க!' என்பதைத் தவிர வேறெதுவும் பேசத் தெரியாத மூளை வளர்ச்சியில்லாத ஏழைச் சிறுவன்.

மே வங்கத்தின் மூர்ஷிதாபாத் அருகிலுள்ள பியசர்பூர் கிராமத்தைச் சேர்ந்த இச்சிறுவர்கள் கல்கத்தா பம்பாய் மூலம் மெக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். "மெக்காவுக்கு வந்ததும் எங்களை சலீம் என்பவனிடம் ஒப்படைத்துவிட்டு சபீர் போய் விட்டான். எங்களுக்கு ரொட்டி கொடுத்து உபசரித்த சலீம் பின்னர் எங்களை தெருவில் போய் பிச்சை எடுக்க நிர்பந்தித்தான். முதலில் நாங்கள் மறுத்தபோது எங்களை அடித்து துவைத்தான். 'பிச்சை எடுக்காவிட்டால் இங்கேயே கொன்று விடுவேன்; நீங்கள் ஊருக்குத் திரும்பவே முடியாது' என்று அச்சுறுத்தினான். பயந்துபோன நாங்கள் வேறு வழியில்லாமல் பிச்சை எடுக்க ஆரம்பித்தோம். ஒரு நாளைக்கு ஏறத்தாழ 50 ரியால் (அரபு நாணயம்) கிடைக்கும். இரவு பத்து மணியானதும் சலீம் அடியாட்களுடன் வருவான், அனைத்தையும் பிடுங்கிக் கொண்டு போய்விடுவான். இப்படி ஒவ்வொரு தெருவுக்கும் ஒரு சலீம் இருக்கிறார்கள்" என்று கூறுகிறார்கள் இச்சிறுவர்கள்.

சானாருல் ஹாக்: குண்டர்களால் கடத்திச் செல்லப்பட்டு, மெக்கா வீதிகளில் 'பே பே' என்று கத்திக் கொண்டு பிச்சை எடுத்த செவிடு—ஊமைச் சிறுவன்.



www.padippakam.com

இது ஏதோ புதிய விவகாரமல்ல. கடந்த ஆண்டு டிசம்பரில் மெக்கா வீதிகளில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த அக்தார், சுனாருல், ரேணுகா, மும்தாஜ் எனும் நான்கு இந்தியச் சிறுவர்களைப் பிடித்து திருப்பியனுப்பியது சௌதி அராபிய போலீசு. 'புனலாய்வு செய்து வருகிறோம். குற்றவாளிகளை விரைவில் கண்டு பிடித்துவிடுவோம்' என்று இந்தியப் போலீசார் வழக்கமான பல்லவியைப் பாடுகிறார்கள். ஹஜ் யாத்திரையின்போது ஆயிரக்கணக்கானயாத்ரீகர்களுக்கு 'விசா' வழங்கப்படுகிறது. இதில் கடத்திச் செல்லப்படும் குழந்தைகள் யார் என்பதை எப்படிக் கண்டறிய முடியும்? குற்றவாளிகள் தப்பிவிடுகிறார்கள் என்று சமாதானம் கூறுகிறது இந்தியப் போலீசு.

முன்பு இத்தகைய குழந்தை கடத்தும் கும்பல் மலேசியா—சிங்கப்பூரில் செயல்பட்டு வந்தது. மூன்றாம் உலகநாடுகளின் உடல் ஊனமுற்ற குழந்தைகளை கடத்தி வந்து பிச்சை எடுக்க வைத்து கொள்ளையடிப்பது இக்கும்பலின் பிரதான தொழில். இந்த கும்பல் இப்போது இந்தியாவில் கொடி கட்டிப் பறக்கிறது. போலீஸ் அதிகாரிகளின் ஆதரவு இல்லாமல் இது எப்படி சாத்தியமாகும் என்று சில பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தியுள்ளன.

மே. வங்கத்தின் எல்லையில் உள்ள மூர்ஷிதாபாத் பகுதிதான் இந்த மாஃபியா கும்பலின் சொர்க்க பூமியாக உள்ளது. 1971 வங்கதேசப் போரின் போது அகதிகளாக வந்து தரித்திர நிலையில் வாழும் இப்பகுதி மக்கள் தங்களது ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிக்க முடியவில்லை. அரசு ஆதரித்து அரவணைக்காத நிலையில் சுமையாகிப்போன இக்குழந்தைகளை சில பெற்றோர்கள் மனதைக் கல்லாக்கிக் கொண்டு விற்கவும் செய்கின்றனர். கடைசியில் இக்குழந்தைகள் மெக்கா வீதிகளில் பிச்சை எடுத்துக் கொண்டு அடிமைகளை விடக் கேவலமான நிலையில் உயிர் வாழ்கின்றனர்.

உடல் ஊனமுற்றோர் ஆண்டு, குழந்தைகள் நல ஆண்டு என்று கோலமாகக் கொண்டாடி அவர்களின் நலனுக்காக அரும்பாடுபட்டு முன்னேற்றி விட்டதாக பீற்றிக் கொள்கிறது இந்திய அரசு. ஆனால் அது எவ்வளவு பெரிய மோசடி என்பதை மெக்கா சம்பவம் திரை கிழித்துக் காட்டுகிறது. இம்மக்கள் விரோத அரசு ஒழிக்கப்படாதவரை பிச்சைத் தொழிலுக்கு குழந்தைகள் கடத்தப்படுவது தொடரத்தான் செய்யும்; மெக்கா வீதிகளில் இந்திய ஏழைக் குழந்தைகளின் 'இன்ஷா அல்லாஹ்' என்ற அவலக் குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.

● குமார்

## இனியும் தொடருமோ இந்தத் துயரம்?

தொழிலாளத் தோழனே,

இதோ, மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர் உன் வர்க்கத் தொழிலாளி வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகள் போலீசாரால் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். ஓட்டுக் கட்சி சார்புள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் துரோகத்துக்குப் பிறகு உறுதியுடன் போராடி வரும் குவாலியர் ரேயான் தொழிலாளர் சங்கத் (GROW) தலைவர்கள் சாகும்வரை உண்ணாவிரதமிருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர். வேலையிழந்த தொழிலாளிகளில் இதுவரை 12 பேர் வாழ வழியின்றி விரக்தியுற்று தற்கொலை செய்து கொண்டுள்ளனர். பல தொழிலாளர் குடும்பங்கள் பட்டினியால் மாண்டு போயுள்ளன.

தரகுப் பெருமுதலாளி பிர்லாவின் குவாலியர் ரேயான் மில் கள்ளிக்கோட்டை அருகே மாவூரில் அமைந்துள்ளது. 196ல் 16 கோடி ரூபாய் முதலீடு செய்து துவங்கிய இந்த மில் மூலம் 53 கோடி ரூபாய் லாபமாகச் சுருட்டிக் கொண்டு, 4000 தொழிலாளிகளை வீதியிலே வீசியெறிந்து விட்டு 1985ல்மில்லை மூடிவிட்டது பிர்லா கும்பல். போலிக் கம்யூனிஸ்ட் தலைவர் நம்பூதிரிபாடு கேரளத்தின் முதல்வராக இருந்தபோது, மாநிலத்தை தொழிற்துறையில் முன்னேற்றப் போவதாகக் கூறி, ரூ 500க்கு விற்கப்படும் ஒருடன் மூங்கிலை ஒரு ரூபாய்க்கு கொடுத்து ஒப்பந்தம் போட்டு, பிர்லா ஆலையை நிறுவ பெருஞ்சேவை செய்தார். 20 ஆண்டுகளுக்குப் பின் ஒப்பந்தம் காலாவதியான பின்னரும் அதே விலைக்கு கொடுக்கச் சொல்லி அடம் பிடிக்கிறது பிர்லா கும்பல் இதோடு வேறு சில எதிர்கோரிக்கைகளையும் வைத்து, 19க்கில் கூலி உயர்வுக்காக நடந்த வேலைநிறுத்தத்தை சாக்காகக் காட்டி கதவடைப்பு செய்துள்ளது.

ஏழு குழந்தைகளுக்குத் தந்தையான 40 வயது மூசா தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டார். மருத்துவர்கள் கடுமையாகப்போராடியும்கூட அவரைப் பிழைக்க வைக்க முடியவில்லை. அவர் வேலை செய்த குவாலியர் ரேயான் ஆலை 31 மாத காலமாக மூடிக் கிடக்கும்போது, வேலையிழந்த அவர் கடன்சுமை தாளாமல் ஒன்றரை வயது பிஞ்சுக் குழந்தையையும் நிராதரவாக்கிவிட்டு தற்கொலை செய்து கொள்ளவும் துணிந்து விட்டார்.

ஆலையைத் திறக்கக் கோரி போராடிய தொழிலாளர்கள் அரசுக்கு கொடுத்த மனுக்கள் குப்பைக் கூடைக்குப் போனது! "நாங்கள் ஆட்சிக்கு வந்த இரண்டே மணி நேரத்தில் மில்லைத் திறப்போம்" என்று சவடால் அடித்து ஓட்டுப் பொறுக்கி ஆட்சிக்கு வந்த 'மார்க்சிஸ்டு' முதல்வர் நாயனாரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த

கொள்ளை லாபமடிக்கும் பிர்லாக்களின் அட்டூழியமும், போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகமும் இனியும் நீடிக்கத்தான் வேண்டுமா? இன்னும் பல மூசாக்கள் தூக்குக் கயிறையும், மூட்டைப் பூச்சி மருந்தையும் தேடுமுன்னே, இன்னும் பல தொழிலாளி குடும்பங் வீதியிலேபிச்சை எடுக்கும் முன்னே இன்றேதோழா, ஒன்றுபடு! இன்றே தோழா, கிளந்தெழு!

தலைவர்கள் சாகும்வரைஉண்ணாவிரதமிருந்தபோது அவர்களுக்குப் பலாத்காரமாக "சத்துநீர்" செலுத்தப்படுகிறது.





படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவ் ஜெயவர்த்தனே கும்பலின் கனவு பலிக்காது!

இந்திய இராணுவச் சிப்பாய்களை ஏற்றிக் கொண்டு லாரிகள் வரிசையாகப் புறப்படுகின்றன. நகரின் எல்லையில் குறுகிய வளைவில் திரும்புகின்றன. சற்றுத் தூரத்தில் ஒரு கிழவி வெற்றிலை பாக்குப் போட்டுக் குதப்பிக் கொண்டிருக்கிறாள். முதல் இராணுவ லாரி அவளைக் கடந்து போகிறது. உடனே தயாராய் வைத்திருந்த மின் இணைப்புள்ள கம்பியின் (வையர்) இரண்டு முனைகளை எடுத்து அந்தக் கிழவி இணைக்கிறாள். பின்னால் வந்த லாரிகளுக்குக் கீழிருந்து பலநூறு கிலோ எடையுள்ள நிலக்கண்ணி வெடி வெடிக்கிறது. லாரிகள் தூள்தூளாகச் சிதறுகின்றன. பல சிப்பாய்கள் சிதைந்து சாகிறார்கள். ஈழமண்ணில் தாய்மார்கள் நடத்தும் ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரின் இராணுவக் காட்சி இது.

அன்னம்மா டேவிட், நேசம்மாவடிவேலு ஆகிய இரு தாய்மார்கள் மட்டக்களப்பு முருகன் கோவிலில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கிறார்கள். ஏழாவது நாளன்று நிலைமை மோசமாகி இருக்கிறது. ஈழப் போராளிகளுக்கு எதிரான போரை உடனடியாக இந்திய இராணுவம் நிறுத்தவேண்டும்; விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று கோருகின்றனர். போரை நிறுத்தினால் பேச்சு வார்த்தை நடத்துவதாக புலிகள் அறிவிக்கின்றனர்.

ஆக்கிரமிப்புப் போர் நடத்தும் இந்திய ஆதிக்க வாதிகள் மீண்டுமொரு அரசியல் நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றனர். ஆனாலும், புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடையும்போது, ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்கும்போது மட்டுமே போரை நிறுத்த முடியுமென்று தாய்மார்கள் அணியின் கோரிக்கையை நிராகரித்துவிட்டது இந்திய அரசு. சென்ற ஆண்டு செப்டம்பரில் உண்ணாவிரதமிருந்து தியாகியானார் திலீபன். "திலீபன் சாவு போன்றதொரு சோகம் மீண்டும் ஏற்பட வேண்டாம்" என்கிறார் இந்தியத் தூதர் சகுனி தீட்சித். அதாவது தாய்மார்கள் மாண்டாலும் போரைத் தொடர்வோம் என்றுகூறுகிறார். "ஒரு மாபெரும் தியாகம் செய்து அந்தப்பெண்கள் வீரதீரமாக சாகலாம்; ஆனால் அது வீணாகத்தான் போகும்" என்று கொக்கரிக்கிறார் இலங்கை இராணுவ மந்திரி லலித் அதுலத்முதலி.

அந்தத் தாய்மார்களின் மாபெரும் தியாகம் வீணாகப் போகாது. திலீபனின் தியாகம் இந்திய ஆக்கிரமிப்பாளர்களைத் தோலுரித்துக் காட்டியதைப் போல, இதுவும் ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பலுக்கு எதிரானதொரு அரசியல் வெற்றியை சாதிக்கும். ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக உயிரைத் தியாகம் செய்யத் துணிந்துவிட்ட தாய்மார்களைக் காண பெருமளவு மக்கள் மட்டக்களப்பு கோவிலில் தினந்தோறும் திரளுகிறார்கள். ஈழமண்ணில் தாய்மார்கள் நடத்தும் அரசியல் போரின் காட்சி இது.



இராணுவ ரீதியிலும் சரி, அரசியல் ரீதியிலும் சரி ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல் எப்படித் தனிமைப் பட்டுப் போயிருக்கிறது என்பதற்கு இவை சாட்சிகள். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புக்களையும், அதிநவீன ஆயுதங்களையும் குவித்துக்கூட, ஒரு நாளைக்கு ஏறக்குறைய பத்து கோடி ரூபாய் கொட்டியும்கூட தொடர்ந்து தோல்விகளையே சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். 400க்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினரை இழந்துவிட்டதாக ஒப்புக் கொள்கிறார்கள். அதில் எழுபது சதவிகிதத்துக்கு மேலே நிலக்கண்ணி வெடிக்குப் பலியானவர்கள்.

கண்டிவெடிகளை வைப்பதில் புலிகள் புதியபுதிய உத்திகளைக் கையாள்கிறார்கள். கண்ணிவெடிகளைக் கண்டுபிடிக்க உலோக கண்டுபிடிப்பு சாதனத்தை இந்திய இராணுவம் பயன்படுத்தினால் புலிகள் திரவ வெடி மருந்தை வைக்கிறார்கள். இப்போது பிரெஞ்சு நாய்களைக் கொண்டு இந்திய இராணுவத்தினர் வெடி மருந்துகளை மோப்பம் பிடிக்க முயலுகிறார்கள். இதற்கு எதிராக ஒளிந்திருந்து தாக்கும் உத்தியைப் புலிகள் மேற்கொள்ளுகிறார்கள். வீடுகளுக்குள் புகுந்து சூறையாடும் கொள்ளையிடும் நோக்கத்தோடு பெட்டிகளைத் திறந்தால் இந்திய இராணுவத்தினரின் முகத்திலேயே அவை வெடிக்கின்றன.

இந்த சாவுகளுக்குப்பதிலடி கொடுக்க முடியாமல் ஆத்திரமுறும் இந்திய இராணுவம் சிவிலியன்களைத் தாறுமாறாக சுட்டுப் படுகொலை செய்வது, பெண்களைக் கற்பழிப்பது, கடைகளை சூறையாடுவது, தொடர்ந்து நீடிக்கிறது என்று கார்டியன் பத்திரிக்கை நிருபர் டெரிக் பிரௌன் எழுதுகிறார். யாழ்நகர் கடைவீதியில் ஒளிந்திருந்த விடுதலைப் புலி, ஒரு இந்திய சிப்பாயைச் சுட்டுக் கொன்று விட்டுத் தப்பிவிட்டார். ஆத்திரமடைந்த இந்திய இராணுவப் பட்டாளம் வந்திறங்கியது. அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்து மூவாயிரம் பேரை, இழுத்து வந்து, கொளுத்தும் வெயிலில் வீதியில் வைத்து நாள் முழுக்க சித்திரவதை செய்தது. துப்பாக்கி முனையால் மக்களைத் தாக்கினர். யாழ்நகரில் சகஜநிலை திரும்பி விட்டதாக தினமும் இந்தியா பிரச்சாரம் செய்கிறது. இதுதான் அங்கு நிலவும் "சகஜ நிலை." அதே சமயம் ஈழதுரோக கும்பல்கள் ஈழத் தமிழப் பயணிகளை சோதனையிட்டுச் சூறையாடுகின்றன. பணயக் கைதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு பணம் பறிக்கின்றன. இவையும் இந்திய இராணுவ உடந்தையுடன் நடக்கின்றன.

புலிகளை ஏறக்குறைய ஒடுக்கி விட்டதாக இந்தியா புளுகுகிறது. ஆனால் ரஷ்யாவிடமிருந்து இந்திய இராணுவம் சமீபத்தில் வாங்கிய அதிநவீன ஆயுத வாகனங்களைத் தகர்த்து பெரும் வெற்றி ஈட்டியுள்ளனர் புலிகள். "பி.எம்.பி—2" எனப்படும் ரஷ்ய ஆயுதவாகனம் ஒவ்வொன்றும் ஒரு கோடிரூபாய் மதிப்புடையது. இந்த ஆண்டு "குடியரசு" தினவிழாவில் பெருமையுடன் அணிவகுத்து வந்தது இரவிலும் பார்வையுடையது; தானியங்கி தீயணைக்கும் அமைப்புடையது; விமானத்தில் எடுத்துச் செல்லவசதியானது; உயிரியல்—இரசாயன மற்றும்அணு ஆயுத போருக்கும் எதிராகத் தாக்குப் பிடிக்கக் கூடியது. இந்த "பி.எம்.பி—2" ரக ஆயுதவாகனங்களில் ஐந்தை விடுதலைப் புலிகள் தகர்த்து விட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

## கடைசி செய்தி

இலங்கை அரசே, ஜெயவர்த்தனேவே நிர்பந்தித்தால்கூட இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேறாது''—என்கிற நமது அரசியல் கணிப்பை நிரூபிக்கும் வகையில் இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் தமது கோரமுகத்தை பகிரங்கமாகக் காட்டிவிட்டனர். கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் சகுனி தீட்சித் பிப்ரவரி 27ந் தேதி அவசர அவசரமாக பத்திரிக்கையாளர்களைக் கூட்டி தனது ஆத்திரத்தைக் கொட்டியுள்ளார்.

''இலங்கை அரசாங்கத் தலைவர்கள் சிலர் தமிழ்ப் போராளிகளுடன் இரகசியப் பேச்சு வார்த்தைகள் நடத்துகிறார்கள்; இந்தியாவைத் தவிர்த்துவிட்டு ஏமாற்றும் எந்த முயற்சியையும் ஏற்க முடியாது. 400க்கு மேற்பட்ட சிப்பாய்களை இழந்துள்ள இந்தியாவின் மீது ஒருதலைப்பட்சமான முடிவை யாராலும் திணிக்க முடியாது. இலங்கை அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவது பற்றிக் கேள்விப்பட்டு அதிர்ச்சி அடைந்துவிட்டோம்.''

''சில ஆலோசனைகள் அசாதாரணமானவை. தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிரானவை. மூன்றிலிருந்து ஐந்தாண்டுகள்வரை தேர்தல் மூலமாக அல்லாமல்நேரடியாக இடைக்காலமாக வடக்கு மாகாண ஆட்சியுரிமை கிடைத்தால் கிழக்கு மாகாணத்திலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக் கொள்வார்கள்; ஆயுதங்கள் வைத்துக் கொள்ளும் உரிமையளிக்கப்படும்; தமிழ், சிங்கள, முஸ்லீம்பகுதிகளாக கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்படும் என்கிற ஆலோசனைகள் பரிசீலிக்கப்படுவதாகஅறிகிறோம், அதுஉண்மையானால் இந்திய அமைதி காக்கும் படையை திரும்பப் பெறும்படி இலங்கை அரசும் புலிகள் அமைப்பும் நிர்பந்திக்கும். சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டால்தான் போரை நிறுத்த முடியும்; மட்டக்களப்பில் இரு தமிழ் பெண்கள் மேற்கொண்டுள்ள சாகும் வரையிலான உண்ணாவிரதத்தினால் போர் நிறுத்தம் செய்யும்படி இந்தியாவை நிர்பந்திக்க முடியாது'' — என்று தீட்சிதர் வெடித்திருக்கிறார். ஆத்திரம், ஆதிக்க வெறி, நிதானமிழந்து, பரபரப்பும் பதட்டமும் தீட்சிதரின் பேச்சில் வந்து விழுந்தன.

''இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக அமுலாக்காமல் சமீப காலத்தில் இந்திய அமைதி காக்கும் படையைத் திரும்ப பெற மாட்டோம்'' என்று இந்திய இராணுவ மந்திரி கே. சி. பந்த் பிப்ரவரி 28ம் தேதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையே போர் நிறுத்தம் கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் இரு தாய்மார்களின் உயிர் ஊசலாடுகின்றது. அவர்களுக்குப் பலாத்காரமாக''சத்துநீர்''செலுத்த இந்திய இராணுவ மருத்துவர்கள் முயன்றனர். ஆனால் தாய்மார்களும் சுற்றிலும் திரண்டுள்ள மக்களும் அவர்களை விரட்டிவிட்டனர். இந்திய நிர்பந்தத்தின் மூலம் நடப்பதாக அறிவித்துள்ள மாகாண தேர்தல்களை ஓரிரு ஈழத் துரோகக் கும்பல்கள் மற்றும் ஜெயவர்த்தனேயின் ஐக்கிய தேசிய கட்சி தவிர அனைத்தும் எதிர்க்கின்றன. ஒரு புறம் ஈழப் போர் நீடிக்கும்போதே, அரசியல் யுத்தம் கடுமையாகி இந்திய ஆக்கிரமிப்பாளர்களை அம்பலப்படுத்துகிறது.

கிழக்கு மாகாணத் தமிழர்களை அனாதைகளாக்கி கிழக்கு மாகாணத்தைப் பிளவுபடுத்துவது, அரசியல் பேரத்தின் மூலம் வடக்கில் புலிகள் ஆட்சி உரிமை பெறுவது,எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்தின் சுயநிர்ணய உரிமையை விட்டுக் கொடுப்பது ஆகியவை ஏற்க முடியாத பிற்போக்கு நடவடிக்கைகளே. ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான அரசியல் ரீதியிலான தாக்குதல் தொடுப்பதற்கு தந்திரோபாய ரீதியிலான நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்டிருப்பதாக தெரிகிறது. அதன் விவரங்கள் குறித்து அதிகாரபூர்வமாக எதுவும் வெளியாகாத நிலையில் ஒரு இறுதி முடிவுக்கு வர முடியாது.

எவ்வாறாயினும் தங்களதுஅரசியல் விதியைத் தீர்மானித்துக்கொள்வதற்கு இலங்கை மக்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. ''இலங்கையின் சுயாதிபத்தியத்தையும், ஒருமைப்பாட்டையும் காப்பாற்றுவதற்காக, இலங்கை அரசின் அழைப்பின் பேரில் அங்கு போயிருப்பதாக'' உரிமைபாராட்டிக் கொண்ட இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் அதில் தலையிட எந்த உரிமையும் கிடையாது. ஆக்கிரமிப்பாளர்களின் முகத்திலே எட்டி உதைத்தால், ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரில் தோற்றால்தான், விரட்டி அடிக்கப்பட்டால்தான் வெளியேறுவோம் என்று பாசிச ராஜீவ் கும்பல் அழுந்தி நின்றால் இலங்கை மக்கள் அப்படியேசெய்ய வேண்டும்.

''இழப்பு ஏற்பட்டாலும் ஆயுதங்களை களத்தில் சோதித்தறிய முடிந்தது. குறிப்பாக களசோதனை செய்வதற்கென்றே 1971 போருக்குப்பிந்திய ஆயுதங்களை ஈழப்போரில்ஈடுபடுத்தினோம்'' என்று இந்தியஅதிகாரிகள் சமாதானம் கூறுகிறார்கள். ஆனாலும் ஈழப்போர் பற்றி சமீபத்தில் ஆய்வு செய்த இந்திய இராணுவ அதிகாரிகள் ஒரு விஷயத்தை ஒப்புக் கொள்கிறார்கள், ''போராளிகளின் உறுதிப்பாட்டை நாங்கள் குறைத்து மதிப்பீடு செய்துவிட்டோம். அவர்கள் மகத்தான இலட்சியத்தோடும், உக்கிரத்தோடும் போரிடுகிறார்கள். இலேசில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.''


ஈழப் போர்முனையிலிருந்து திரும்பும் இந்திய இராணுவத்தினர் புலிகளுடனான போர் இந்தியாவின் வியத்நாம் போரைப் போன்றதாகிவிட்டது என்றும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இந்தியப் பத்திரிக்கைகள் பகிரங்கமாகவே இதை எழுதுகின்றன. ஆனாலும் ரஷ்யாவின் தெற்கு ஆசியத் துறைத் தலைவர் யூரி வினோகிரோவோவ் கொழும்புக்குப்போய், 'இலங்கையில் இந்திய இராணுவமிருப்பதை வியத்நாமில் அமெரிக்கா சிக்கிக் கொண்டதோடு ஒப்பிட முடியாது'' என்று சமாதானம் கூறுகிறார்.

ராஜீவ்—கும்பலின் இராணுவத் தோல்வியை மூடி மறைப்பதற்காக மாகாணத் தேர்தல்களை நடத்துவது என்ற அரசியல் சாகசத்தை அது முன்தள்ளுகிறது. ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்கும் ஈழ துரோக கும்பல்களும், இலங்கை போலி சோசலிசஎதிர்க்கட்சிகளும் மாகாண தேர்தல்கள் தற்போது நடப்பதை ஏற்கவில்லை. பிரதான எதிர்க்கட்சியான பண்டாரநாயகாவின் சுதந்திர கட்சி தேர்தல்களைப் புறக்கணிப்பதாக அறிவித்து விட்டது ''மாவு விற்கப் போனால் காற்றடிக்குது;உப்பு விற்கப் போனால் மழைபெய்யுது'' என்கிற நிலையில் ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல் சிக்கிக் கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com




# "ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்"

**பரிபூரண சுதந்திரம் என்கிற தீர்மானம் போட்டுக்கொண்டு காலனிய ஆட்சி நீடித்திருப்பதற்காகவே காந்தியும் காங்கிரசும் வேலை செய்து வந்தனர். நீதிக்கட்சியினர் செய்ததைப் போல இவர்கள் செய்ததும் தேச துரோக வேலையே அவற்றையெல்லாம் ராமமூர்த்தி மூடிமறைத்துவிட முயல்கிறார்.**

(சென்ற இதழின் தொடர்ச்சி)

திராவிட இயக்கத்தினர் பாரம்பரிய உரிமை கொண்டாடிக் கொள்ளும் நீதிக் கட்சியின் வரலாற்றை தொகுக்கும் பி. ராமமூர்த்தி இரண்டு கருத்துக்களை வலியுறுத்திச் சொல்கிறார்:

● "பார்ப்பனர் அல்லாதாரின் நலம் காப்பதாக பறைசாற்றிய ஜஸ்டிஸ் (நீதி) கட்சியின் தலைவர்கள், உண்மையில் ஜமீன்தார்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் நலன்களைக் காப்பதற்காகத்தான் **ஜஸ்டிஸ் கட்சியைத் துவக்கினார்னார்கள்."**

● "இந்தக் கட்சி இருந்துவந்த காலம் பூராவிலும் இந்த நாட்டின் வரலாற்றில் அது வகித்து வந்த பாத்திரம் தேச பக்தியும் சுதந்திர வாஞ்சையும் கொண்ட எந்தவொரு இந்தியனும் பெருமைப்படக் கூடியதாக இல்லை; மாறாக வெட்கித் தலைகுனிய வேண்டியதாக இருந்தது." "இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியை நீடித்து நிறுத்துவதற்காக, அதை ஒழிக்கப் பாடுபட்ட சகல இயக்கங்களையும் எதிர்க்கும் பணியைத்தான் தென்னிந்திய லிபரல் பெடரேஷன் என்னும் 'ஜஸ்டிஸ் கட்சி' இருந்த வரையில் செய்து வந்தது. இவ்வாறு பிரிட்டிஷ் சரண்டலுக்கும், கொள்ளைக்கும் துதிபாடி வந்தது."

இவ்விரு கருத்துக்களையும் நிரூபிப்பதற்காக "விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்" என்ற தமது நூலில் பல உதாரணங்களைக் கொடுத்துள்ளார்.

உண்மை! முற்றிலும் உண்மைதான்! நீதிக்கட்சியினரின் துரோகச் செயல்கள் தேசபக்தியும் சுதந்திர வாஞ்சையும் கொண்ட எந்தவொரு இந்தியனும் பெருமைப்படக் கூடியதாக இல்லை; மாறாக வெட்கித் தலைகுனிய வேண்டியவைதாம்!

ஆனால் பாதிக்கிணறு தாண்டுகிறார் ராமமூர்த்தி! நீதிக்கட்சியின் துரோகங்களைத் தொகுத்துச்சொல்லும் ராமமூர்த்தி, அவற்றைவிட சற்றும் குறைவில்லாத, உண்மையில் பெரிய, பரந்து விரிய நாடு தழுவிய காங்கிரசு—பார்ப்பனீய துரோகங்களை மூடி மறைக்கிறார். நீதிக் கட்சியின் அப்பட்டமான துரோகங்களுக்கு எதிராக காந்திய—காங்கிரசின் நயவஞ்சகத்தனமான துரோகங்களையேகூட ஏற்றிப் போற்றுகிறார்.

"இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியை நீடித்து நிறுத்துவதற்காக, அதை ஒழிக்கப் பாடுபட்ட சகல இயக்கங்களையும் எதிர்க்கும் பணியைத்தான் நீதிக்கட்சி இருந்தவரை செய்து வந்தது"—இதுதான் நீதிக் கட்சியின் பிரதானதேச துரோகச் செயல். ஆனால் இதே வேலையைத்தான் காந்திய—காங்கிரசு தலைமையும் செய்து வந்தது.

பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாச ஊழியஞ் செய்வதாக 1916இல் நீதிக்கட்சி நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றைத் தருகிறார் ராமமூர்த்தி. இதைப்போல பல தீர்மானங்கள் காங்கிரசு மாநாடுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

● "உலகில் நாகரிகமடைந்த நாடுகள் அளவுக்குப் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியை நாம் அடைவதற்கு பிரிட்டிஷாருடைய தொடர்பு நமக்கு நீண்ட காலத்துக்குத் தேவையாகும்." (1893ல் தாதாபாய் நவ்ரோஜி)

● "இங்கிலாந்து நாட்டுக்குப் படித்த வகுப்பினர் எதிரிகளல்ல நண்பர்களாவர்."(1898ல் ஆனந்த மோகன் போஸ்)

● "பிரிட்டனுக்கு விசுவாசமாக இருந்து ஊசலாட்டமின்றி சேவை செய்வதேயல்லாமல் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றுவதல்ல. மாறாக, அதன்அடிப்படையைப் பரவலாக்குவதாகும்." (சுரேந்திர நாத் பானர்ஜி.)

● "இந்திய மக்கள் உடனடியாக மாற்றத்தையோ புரட்சியையோ விரும்பவில்லை. நிலவுகின்ற அரசை பலப்படுத்தவும், அதை மக்களோடு நெருக்கமாகக் கொண்டு வரவும் தீர்மானித்துள்ளனர். இந்திய விவசாயம் மற்றும் தொழில்களைப் பிரதிநிதித்துவப்படுத்த அரசு செயலகத்திலும், வைசிராயினுடைய நிர்வாக குழுவிலும் சில இந்திய உறுப்பினர்கள் வேண்டுமென விரும்புகின்றனர்." (1901ல் காங்கிரஸ் தீர்மானம்)

**ஆக, இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி நீடித்திருக்க வேண்டும் என்பதுதான் காங்கிரசின் நோக்கமாக இருந்தது.** இவை ஆரம்பகாலத் தீர்மானங்கள் என்று ஒதுக்கிவிட முடியாது. 1914, 1915, 1916ம் ஆண்டுகளில் சென்னை, பம்பாய், உத்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் நடைபெற்ற காங்கிரசு மாநாடுகளில் ஆங்கிலேய ஆளுநர்கள் தனி அக்கறைப்பட்டு நேரடியாகப் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்கள்.

ராமமூர்த்தியே ஒப்புக்கொள்வதுபோல 1930 வரை "பூரண சுதந்திரம்" என்பது காங்கிரசு தீர்மானத்தில் கூட ஏறவில்லை. ஆங்கிலேயப் பேரரசுக்குள் ஒரு சுயாட்சி (டொமினியன் அந்தஸ்து) அடைவதுதான் காங்கிரசின் இலட்சியமாக இருந்தது.

"சுயராஜ்யம் தனது லட்சியம் என்று காங்கிரஸ் அமைப்புத் திட்டத்தில் கூறப்பட்டிருந்தபோதிலும், சுயராஜ்யம் என்பதற்கு பல விளக்கங்கள் கூறப்பட்டன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள் இருந்து டொமினியன் அந்தஸ்த்து கிடைத்தால் அது சுயராஜ்யம்தான் என்றுவாதிப்பவர்களும் அன்று இருந்தனர். வாலிபர்களுடைய இயக்கம் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரிட்டிஷ் சர்க்காருடன் எவ்விதத் தொடர்பும் இல்லாத பூரணசுயராஜ்யம்—உருதுவில் 'முகம்மில் ஆசாத'தான் லட்சியம் என்று காங்கிரஸ் அமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும்; பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று தீர்மானங்கள் வாலிபர் மாநாடுகளில் நிறைவேற்றப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

1925ம் ஆண்டு இறுதியில், கான்பூரில் நடந்த காங்கிரஸ் மகாசபை மாநாட்டில் மௌலானா ஹஸரத் மொஹானி இத்தகைய ஒரு தீர்மானத்தைகொண்டுவந்தார். வாலிபர்களுக்கிடையே அந்தத் தீர்மானத்திற்கு மிகுந்த ஆதரவு இருந்தது. ஆயினும் அதுதோற்றுப் போய்விட்டது.'' (மேற்படி நூல் பக். 66—67.)

''சுயராஜ்யம்'' என்பதற்கு ''முழு சுதந்திரம்; எல்லா வெளி நாட்டுக் கட்டுப்பாடுகளிலிருந்தும் சுதந்திரம்'' என்று மௌலானா ஹஸரத் மோஹானி தீர்மானம் கொண்டு வந்ததும் ஆத்திரமடைந்த காந்தி அவரை எப்படிச் சாடினார் என்பதை ராமமூர்த்தி மறைத்து விட்டார். ''ஹஸ்ரத்தின் தீர்மானம் பொறுப்பற்றது. என்னை சங்கடத்தில் தள்ளுகிறது. தன்னுடைய தீர்மானத்தின் மூலம் அவர் ஆழம் தெரியாத தண்ணீருக்குள் நம்மை இழுத்துச் செல்லுகிறார்; ஆழம் தெரியாத தண்ணீருக்குள் நாம் போக வேண்டாம்'' என்று எச்சரித்து எரிந்து விழுந்தார் காந்தி.

அதன் பிறகு பூரண சுதந்திரத்துக்கான கோரிக்கை வரும்போதெல்லாம் காந்தி கடைசிவரை எதிர்த்தார். தவிர்க்க முடியாத நிலையில் காங்கிரசு பூரண சுதந்திரத்துக்கான தீர்மானத்தை நிறைவேற்றியபோதுகூட ''காங்கிரசை விட்டு வெளியேறி விடுவேன்'' என்று அடாவடித்தனமாக மிரட்டியிருக்கிறார். சாக்குப் போக்குகள் சொல்லித் தீர்மானத்தைத் தள்ளிப் போட்டிருக்கிறார். அல்லது நிறுத்தி வைத்திருக்கிறார். ''பூரண சுதந்திரம்'' கோரும் தீர்மானம் நிறைவேறிய பிறகும் அதற்கான போராட்ட காலம், முறை, வழிகாட்டுதல் ஆகியவற்றிற்கு ஏகபோக உரிமை பெற்றுக் கொண்டு சதிகள் மூலம் சீர்குலைத்திருக்கிறார். ராமமூர்த்தியின் நூலிலேயே இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

சைமன் கமிஷனைப் புறக்கணித்த காங்கிரசு, இந்தியாவுக்கு எப்படிப்பட்ட அரசியல் திட்டம் இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்வதற்காக மோதிலால் நேருவைத் தலைவராகவும் ஜவகர்லால் நேருவை செயலாளராகவும் கொண்ட கமிட்டியை நியமித்தது. அப்போது பரிபூரண சுதந்திரத்தைக் கோரும் கிளர்ச்சி பலமாக வெடித்தது. ''இப்படிப்பட்ட சூழ்நிலையில், 'நேரு கமிட்டி' டொமினியன் அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டத்தை சிபாரிசு செய்தது. உடனே நாடெங்கிலும் இந்த சிபாரிசை எதிர்த்து காங்கிரசு ''பரிபூரண சுதந்திரம் தனது இலட்சியம்'' என்று தீர்மானிக்க வேண்டும் என்று கோரி, பலமான கிளர்ச்சி நடந்தது.''

''இதன் விளைவாக, 1928ம் ஆண்டு இறுதியில் சென்னையில் நடந்த காங்கிரசு மகாசபை மாநாடு பூரண சுதந்திரம்தான் காங்கிரசின் இலட்சியம் என்று தீர்மானத்தை நிறைவேற்றியது.''

''இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முந்திய ஆண்டு கான்பூரில் நடந்த மாநாட்டில் இதே தீர்மானம்,தோற்றுப் போனது என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஈராண்டு காலத்திற்குள் நாட்டில் ஏற்பட்ட நிகழ்ச்சிப் போக்கின் காரணமாகவும், அதன் விளைவாக ஏற்பட்ட உணர்ச்சிப் போக்கின் காரணமாகவும், சென்னை மாநாட்டில் இந்தத் தீர்மானம் நிறைவேறியது.

இந்த மாநாடுகளில் எல்லாம் காந்தி கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் டொமினியன் அந்தஸ்து காங்கிரசின் லட்சியம் என்ற நேரு கமிட்டியின் சிபாரிசு, நிராகரிக்கப்படும் நிலையில் இருந்தது. அந்த விவாதத்தில் காந்தி குறுக்கிட்டு, ஓராண்டிற்குள் பிரிட்டிஷ் சர்க்கார் டொமினியன் அந்தஸ்தை இந்தியாவிற்கு வழங்கினால் அதை ஏற்றுக் கொள்வது; இல்லையேல், பூரண சுயராஜ்யம் இந்தியாவின் இலட்சியம் என்று, அடுத்த காங்கிரஸ் மகாசபை மாநாட்டில் அறிவிப்பது என்ற தீர்மானத்தை முன்மொழிந்து, சில ஓட்டுக்கள் வித்தியாசத்தில் அந்தத் தீர்மானம் நிறையது. (மேற்படி நூல் பக். 80—81)

ஆக 1928ல் கூட ஓராண்டுக்குள் டொமினியன் அந்தஸ்துதான் கோரினார்கள். இல்லையானால் தான் ''பூரண சுதந்திரம்'' காங்கிரசின் இலட்சியமாக அடுத்த மாநாட்டில் அறிவிக்கும் என்று தீர்மானம் போட்டனர். டொமினியன் அந்தஸ்து தர பிரிட்டிஷ் அரசு மறுத்து விட்டது; வேறு வழியின்றி 1930ல் லாகூர் காங்கிரசு மாநாட்டில் ''பூரண சுயராஜ்யம்''தான் லட்சியம் என்ற தீர்யானம் நிறைவேறியது. அப்போதும் கூட ''இந்த இலட்சியத்தை அடைவதற்காக வெகுஜனப் போராட்டத்தை, சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்துவது என்றும் அதற்கு காந்திஜி தலைமை தாங்க வேண்டும் எனவும் அது எந்த வடிவத்தில் இருக்கும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை காந்திஜிக்கு அளிப்பது என்றும் நிச்சயிக்கப்பட்டது.'' —மேற்படி நூல் பக்87.



பரிபூரண சுதந்திரம்தான் காங்கிரசின் இலட்சியம் என்று தீர்மானம் நிறைவேற்றிய பிறகும்கூட டொமினியன் அந்தஸ்தை ஏற்பது என்கிற நிலையிலேயே தொடர்ந்து காங்கிரசு நீடித்தது. பரிபூரண சுதந்திரம் என்கிற லட்சியத்தை அடைவதற்கான தலைமையும், வழிகாட்டும் பொறுப்பும் ஏற்ற காந்தி அந்த இலட்சியத்திலிருந்து திசை திருப்பும் வேலையையே செய்துவந்தார். ராமமூர்த்தியே இதைப் பின்வருமாறு கூறுகிறார்.

''காந்தி, பூரணசுதந்திரம் இந்தியாவின் இலட்சியம் என்று காங்கிரஸ் மகாசபை அறிவித்ததை எதிர்த்தது, பிறகு அடுத்த ஓராண்டுக்குள் டொமினியன் அந்தஸ்து கொடுத்தால் ஏற்றுக் கொள்வது என்ற சாகசத்தில் இறங்கியது; அது கிடைக்காமல் போகவே அடுத்த ஆண்டில் லாகூரில் பூரண சுதந்திரத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, வெகுஜனப் போராட்டத்திற்கு தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அதற்குப் பிறகு 11 கோரிக்கைகளடங்கிய ஒரு திட்டத்தை வைத்து அதை ஏற்றுக் கொண்டால் சுயராஜ்யத்தின் சாரம் கிடைத்துவிட்டதுஎன்று தான் கருதுவதாகவைஸ்ராய்க்கு எழுதியது; அதுவும் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சட்டமறுப்புப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிர்பந்த நிலை ஏற்பட்டபோது, உப்புச் சட்டத்தை மீறுவது என்ற போராட்ட வடிவத்தைத் தேர்ந்தெடுத்தது. அர்த்தால், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் முதலிய ஆர்ப்பாட்டங்களுக்கு அறைகூவாமல் இருந்தது; மக்களுடைய எழுச்சி என்றும் கண்டிராத வகையில் இருந்தபோதும் எந்த வாக்குறுதியும் மகாநாட்டில் கலந்துகொள்ள ஒப்புக்கொள்ளும் ஒப்பந்தத்தைச் செய்தது; ஆகிய இவை எல்லாம் காங்கிரஸ் தலைமையின் வர்க்கத் தன்மையை தெளிவாக்கின.''

காங்கிரசு தலைமையின் வர்க்கத் தன்மைகள் என்று ராமமூர்த்தி குறிப்பிடும் நடத்தைகளின் விளைவு என்ன? ''1929 டிசம்பர் 31—1930 ஜனவரி 1 நள்ளிரவு ரவி நதிக்கரையில் காங்கிரசு மகாசபை நிறைவேற்றிய பூரண சுதந்திரக் கோரிக்கை கப்பலேறியது. அதேபோன்று 1930 ஜனவரி 26ந் தேதி நாடெங்கும் மக்கள் பூரண சுதந்திரத்திற்காக எடுத்துக் கொண்ட சபதம் கப்பலேறியது.'' —மேற்படி நூல் பக். 93.



படிப்பகம்

ஆக பரிபூரண சுதந்திரம் என்கிற இலட்சியத்துக்குக் குழிபறிப்பதுதான் காந்திய—காங்கிரசின் நடைமுறையாக இருந்தது. அதன் மூலம் காலனிய ஆட்சி நீடித்திருப்பதற்கான துரோக வேலையையே—பார்ப்பனரல்லாதார் உரிமை என்கிற போர்வையில் நீதிக்கட்சியினர் செய்து வந்த துரோகத்தையே—“சுயராஜ்யம்” என்கிற போர்வையில்—காந்தியும் காங்கிரசும் செய்து வந்தனர்.

காந்தி—இர்வின் ஒப்பந்தம், அதன்படி நடந்த லண்டன் வட்ட மேஜை மாநாடு ஆகியன கேலிக்கூத்தாக முடிந்த பின்னும் காந்தியும், காங்கிரசும் கோரிய சலுகைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட பின்னும், காங்கிரசு மீது தடைவிதிக்கப்பட்டு, தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டபோதும்கூட அறிவிக்கப்பட்ட இலட்சியமான பரிபூரண சுதந்திரத்தை அடைவதற்கான முயற்சி எதையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. இருமுறை சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கினார் காந்தி. அதுவும் காலனிய அரசை எதிர்த்து அல்ல. அரிசனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதை எதிர்த்தும், பிறகு நாட்டு மக்களிடையே அரிசனங்கள் பால் மனமாற்றம் கோரியும் இருந்தவை. அந்தச் சமயங்களில், “ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் தனிப்பெரும் தலைவரான காந்திஜி போராட்டத்தைப் பற்றியோ, வேறு எந்த அரசியலிலோ அக்கறை காட்டவில்லை” —மேற்படி நூல் பக். 105. என்கிறார் ராமமூர்த்தி.

பரிபூரண் சுதந்திரம் அல்ல; பரிபூரண ஏகாதிபத்திய சேவைதான் தனது இலட்சியம் என்பதை நிரூபிக்கும் வகையில் காந்தி இன்னும் ஒரு வேலை செய்தார். 1934ல் “அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், காங்கிரசின் ஸ்தாபனத் திட்டத்தில் சமாதான முறையிலும், நியாயமான முறையிலும் (Peaceful & Legitemate Means) பரிபூரண சுதந்திரத்தை அடைவது என்றிருந்த இலட்சியத்தை அஹிம்சாபூர்வமாக (Non Violent Means) பூரண சுதந்திரம் அடைதல் என்று திருத்த வேண்டும் என்று காந்திஜி கூறினார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அதை ஏற்கவில்லை.

“அந்தக் கூட்டம் முடிந்த இரண்டு மாதங்களுக்குள் காந்திஜி காங்கிரசின் நான்கு அணா உறுப்பினராகக் கூட இருக்க முடியாது என்று கூறி ராஜினாமா செய்துவிட்டார்.

அப்புறம் பூரண சுதந்திரம் என்கிற இலட்சியத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு காலனிய அரசு வீசிய எலும்புத்துண்டுகளை—மந்திரி பதவிகளை—கல்விக் [illegible] முடங்கிவிட்டது. இரண்டாவது உலகப்போரில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைகிறது என்கிற நிலைமை உருவாகும் வரை “பரிபூரண சுதந்திரம்” பற்றி காந்தியோ காங்கிரசோ மூச்சுவிடவில்லை. அப்போதும் கூட வெற்றியடைந்து கொண்டிருந்த பாசிச அச்சு நாடுகளின் பக்கம் சாய்வதென்று சுபாஷ் சந்திர போஸ் தலைமையிலான ஒரு பிரிவும், புதிதாக மேலாண்மை பெற்று வந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பக்கம் சாய்வதென்று நேரு தலைமையிலான மற்றொரு பிரிவும் முடிவு செய்தது.

அப்போதைய அரசியல் நிலைமையைக் கணிக்க முடியாமல் குழம்பிக் கொண்டிருந்த காந்தி “ஆக்கிரமிப்புப் போரை அகிம்சா முறையில் எதிர்ப்பது” என்று பிதற்றிக் கொண்டிருந்தார் 1942 ஆகஸ்டில் “வெள்ளையனே வெளியேறு” என்கிற இயக்கம் நடத்துவதாகத் தீர்மானித்த பிறகு கூட அதை சீர்குலைக்கும் வேலையில் காந்தி இறங்கினார். “காந்திஜி உடனடியாக வெகுஜனப் போராட்டத்தை துவக்கப் போவதில்லை. பிரிட்டிஷ் சர்க்காரோடு பேச்சு வார்த்தைக்கு முயற்சி செய்யப்படும். இந்தத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப் போகும் முதல் நடவடிக்கையாக வைஸ்ராய்க்கு கடிதம் எழுதப் போவதாக அந்தக் கூட்டத்திலேயே அவருடைய உரையில் பகிரங்கமாக அறிவித்தார். “காந்தி முடிவு செய்யும் வரை எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த நடவடிக்கையிலும் இறங்கக் கூடாது; இறுதியில் அவர் போராட்டத்தைத் துவக்காமலே போகலாம்” —மேற்படி நூல் பக். 18. என்று காங்கிரசு கமிட்டிகளுக்கு எச்சரிக்கும் சுற்றறிக்கை கூட தயாரித்தனர். வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவங்குவதற்கு முன்பே காந்தியும், பிற காங்கிரசு தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

> கம்யூனிஸ்டுக்கே உரிய
> நேர்மையுடன் நீதிக்கட்சி
> மற்றும் காந்திய—காங்கிரசின்
> குற்றங்களை
> ராமமூர்த்தி
> எடைபோடவில்லை.
> திரிபுவாதிக்கே உரிய
> ஒருதலைப்பட்சமாக
> எடைபோடுகிறார்.
> அவரது காந்திய—காங்கிரசு
> பார்ப்பனீயப் பார்வை
> கண்களை மறைக்கின்றது.

ராமமூர்த்தியின் வாக்குமூலப்படியேகூட 193 வரை பிரிட்டிஷ் பேரரசின் கீழ் டொமினியன் அந்தஸ்து அடைவதுதான் காங்கிரசின் இலட்சியம். பரிபூரண சுதந்திரம் அல்ல. அதன் பிறகும் கூட பரிபூரண சுதந்திரத்துக்காக காங்கிரசும் காந்தியும் போராடவே இல்லை. 1942 ஆகஸ்டு “வெள்ளையனே வெளியேறு” தீர்மானத்துக்குப் பிறகு கூட “அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாலோ அல்லது காந்திஜியாலோ எந்த இயக்கமும் உத்தியோக பூர்வமாகத் துவக்கப்படவில்லை” என்று 1945ல் சிறையிலிருந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் நேருவும், படேலும், பந்தும் கையெழுத்திட்டுள்ளனர்” —மேற்படி நூல் பக். 191.

பரிபூரண சுதந்திரம் என்கிற தீர்மானம் போட்டுக் கொண்டு காலனிய ஆட்சி நீடித்திருப்பதற்காகவே காந்தியும் காங்கிரசும் வேலை செய்து வந்தனர். நீதிக்கட்சியினர் செய்ததைப் போல இவர்கள் செய்ததும் தேசத் துரோக வேலையே ஆகும் அதுமட்டுமல்ல, நீதிக் கட்சியினரைப் போலவே விடுதலைக்காகப் போராடும் சக்திகளை எதிர்த்து இன்னும் பல துரோகத்தனமான செய்கைகளைச் செய்துள்ளனர். அவற்றையெல்லாம் ராமமூர்த்தி மூடிமறைத்துவிட முயல்கிறார்.

நீதிக்கட்சியின் துரோகத்தனங்கள் ஜமீன்தார்கள், நிலப்பிரபுக்களின் நலன் காப்பதற்காக, பிரிட்டிஷ் ஆட்சி நீடித்திருப்பதற்கானவை தாம்! அதே போன்று நிலப்பிரபுக்கள், தரகு அதிகார முதலாளிகளின் நலன் காப்பதற்காக பிரிட்டிஷ் ஆட்சி நீடித்திருப்பதற்கானவை தாம் காங்கிரசின் துரோகங்களும். ஆனால் காங்கிரசின் துரோகங்களை மூடி மறைத்தும், மழுப்பியும் மொத்தத்தில் காங்கிரசு இயக்கம் விடுதலைப் போரை நடத்தியது; நீதிக்கட்சி துரோகமிழைத்தது என்று ராமமூர்த்தி சித்தரிக்கிறார்.

ஒரு தரப்பு பற்றிய உண்மைகளையும், மறுதரப்பு பற்றிய பொய்களையும் கலந்து ராமமூர்த்திஎழுதுவதால் “எங்களை மட்டும் சொல்கிறீர்களே, நீங்கள் மட்டும் என்ன யோக்கியமா?” என்கிற திராவிட இயக்கத்துக்கே உரிய பாணியில் நீதிக்கட்சியின் வாரிசுகள் பதிலளிக்கிறார்கள். ஒரு தரப்பின் துரோகங்கள் மற்றொன்றின் துரோகங்களை ரத்து செய்வதுமில்லை; நியாயப்படுத்துவதுமில்லை. கம்யூனிஸ்டுக்கே உரிய நேர்மையுடன் நீதிக்கட்சி மற்றும் காந்திய—காங்கிரசின் குற்றங்களை ராமமூர்த்தி எடைபோடவில்லை. திரிபுவாதிக்கே உரிய ஒருதலை பட்சமாக எடைபோடுகிறார். அவரது காந்திய—காங்கிரசு பார்ப்பனியப் பார்வை கண்களை மறைக்கின்றன.

—(தொடரும்)



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# வெகுஜன கற்பழிப்பு
# வீடு புகுந்து சூறையாடல்
# பீகார் போலீசின் அட்டூழியம்

ஆலயங்கள் நிறைந்த பீகாரின் தியோகர் மாவட்டத்தின் பாரா ரியா கிராமம். பிப்ரவரி 18ந் தேதி நள்ளிரவு. 25 குடும்பங்களைக் கொண்ட இக்குக்கிராமத்தின் விவசாயிகள் உழைத்துக் களைத்த அலுப்பில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். திடீரென கதவு படபடவென தட்டப்பட்டது. கொள்ளையர்கள்தான் வந்து விட்டார்கள் என்று பயந்து யாரும் கதவைத் திறக்கவில்லை.

“கதவைத் திறக்கச் சொல்லி அவர்கள் இடித்தார்கள். என் தந்தை வீட்டுக் கதவைத் திறக்க மறுத்தார். கதவை இடித்துப் பார்த்து திறக்க முடியாமல் போகவே கூரையைப் பிரித்துக் கொண்டு அவர்கள் உள்ளே குதித்தனர். எங்களை கண்முன் தெரியாமல் அடித்து துவைத்தனர். ஐந்து குண்டர்கள் என் முடியைப் பிடித்து தரதரவென இழுத்துச் சென்றனர். என் நகைகளைப் பறித்துக் கொண்டனர். வீட்டின் இருண்ட மூலைக்கு இழுத்துச் சென்று, என்னை மாறி மாறிக் கற்பழித்தனர். வீட்டின் மற்ற மூன்று அறைகளைச் சூறையாடி பணப்பெட்டியை உடைத்து நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்” என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறுகிறார் 32 வயதான தரியா தேவி.

யார் இந்தக் கொள்ளையர்கள்? கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்ட சமூக விரோதக் கும்பலா? இல்லை. சட்டத்தின் காவலர்கள் எனப்படும் காக்கிச் சட்டை கயவாளிகள்தான்!

பீகாரின் ஜசிடி போலீசு நிலையத்தைச் சேர்ந்த போலீசாருக்கு ஏதாவது ‘சாதனை’ செய்து தமது திறமையை வெளிப்படுத்தி மேலிடத்தில் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று ரொம்ப நாளாக ஆசை. இதுவரை போலீசார் செய்த சாதனைகளையெல்லாம் தூக்கியடிப்பதாக இருக்க வேண்டும் என்று ‘அறிவு பூர்வமாக’த் திட்டம் தீட்டினார்கள். அதன்படி பாரா ரியா கிராமத்தைச் சூறையாடி பெண்களைக் கும்பலாக கற்பழிப்பது என்று முடிவானது. சாராயத்தை ஊற்றிக் கொண்டு மூன்று டிராக்டர்களில் துப்பாக்கி ஏந்தியபடி காக்கிச் சட்டை ரௌடிகள் கும்மாளமிட்டுக் கொண்டு புறப்பட்டார்கள்.

“என் துணிகளை உருவி என் தலைமுடியைப் பற்றி இழுத்து அடித்தனர். நான் கத்தினேன்; கதறினேன். என் வாயில் துணி வைத்து அடைத்து கைகளைக் கட்டிப்போட்டு மாறி மாறி கற்பழித்தனர்” என்று கண்ணீர் மல்க கதறுகிறார் முப்பது வயதான ராதியா தேவி. “அவர்கள் காலில் விழுந்து கெஞ்சியும்கூட அந்த மிருகங்கள் எங்களை கற்பழித்தன” என்கிறார்கள் ஷூமா தேவி, நிமா தேவி, பக்வத்யா தேவி ஆகியோர். “என்னைக் கடித்துக் குதறிய அந்த வெறிநாய்கள் பக்கத்து அறையில் உறங்கிக் கொண்டிருந்த என் இளம் பெண்ணையும் மாறி மாறிக் கற்பழித்தன” என்று வார்த்தைகள் வெளிவராமல் கேவுகிறார் வீணா தேவி. அன்று நள்ளிரவில் நடந்த வெறியாட்டத்தை நினைத்தாலே அவர்கள் உடல் நடுங்குகிறது.

காக்கிச் சட்டைகயவாளிகளின் காமவெறி சற்றே தணிந்ததும் அவர்கள் வீடுவீடாக சூறையாடத் தொடங்கினர். ஒவ்வொரு வீட்டையும் அவர்கள் தலைகீழாகப் புரட்டிப் போட்டனர். பணத்தையும் நகைகளையும் சுருட்டிக் கொண்டனர். சிலர் ரேடியோ போன்றவற்றை தூக்கிக் கொண்டனர். மறித்து தடுத்தவர்களின் மண்டை பிளக்கப்பட்டது. நள்ளிரவு 2.30 மணிவரை இந்த வெறியாட்டம் நடந்தது. அதன்பிறகு 14 விவசாயிகளை அவர்கள் அடித்து ‘கைது’ செய்திருப்பதாகக் கூறி தங்களோடு இழுத்துச் சென்றனர். தாங்கள் சூறையாடிய பொருட்களில் சிலவற்றை அவர் கையில் திணித்து திருட்டுப்பட்டம் கட்டி கொள்ளையர் கூட்டம் ஒன்றை பிடித்துவிட்டதாக தம்பட்டம் அடித்துக்கொண்டனர்.

இச்சம்பவம் நடந்து ஐந்து நாட்களுக்குப் பின்னர்தான் மெதுவாக செய்தி கசியத் தொடங்கியது. ஆனாலும் திட்டமிட்டே செய்திகளை இருட்டடிப்பு செய்து மூடி மறைக்க முயற்சிக்கிறது போலீசு கும்பல். அதன்பிறகு, பீகார் லோக்தள கட்சித் தலைவர் வி.பி. யாதவ் கட்சித் தொண்டர்களுடன் இக்கிராமத்திற்குச் சென்று கற்பழிப்பு சூறையாடலை நடத்தியது போலீசாரே என்று உறுதிப்படுத்தியுள்ளார். விவகாரம் அம்பலப்பட ஆரம்பித்ததும் உதவிப் போலீஸ்கமிஷனரும், சூப்பிரண்டும் அக்கிராமத்துக்கு ‘ஆறுதல்’ கூறச் சென்றனராம். ஆறுதல் என்பது போலீஸ் அகராதியில் மிரட்டல் என்று பொருள். எனவேதான் கற்பழிப்பு சூறையாடலில் ஈடுபட்ட போலீசாரை இன்றுவரை கைது செய்ய மறுக்கின்றனர். சட்டபூர்வ சமூக விரோதக் கும்பலைக் காப்பாற்ற வழக்கம் போலவே ‘தகுந்த ஆதாரங்கள் இல்லை’ என்று நாடகமாடுகின்றனர்.

எட்டு ஆண்டுகளுக்குமுன் பட்டப்பகலில் பீகாரின் பாக்பட் நகரில் கணவனைச் சுட்டுக்




கொன்றுவிட்டு கர்ப்பிணியான மாயாத்தியாகியை நடுவீதியில் நிர்வாணமாக இழுத்துச் சென்று கும்பலாக கற்பழித்தது பீகார் போலீசு. எட்டாண்டுகளுக்குப் பிறகு குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதித்து காக்கிச் சட்டையின் கறையைப் போக்க முயற்சித்தது ‘நீதித்’ துறை. தீர்ப்பு வழங்கப்பட்டதும் உயர்நீதி மன்றத்திற்கு மேல்முறையீடுசெய்து ஜாமீனில் வெளிவந்து கெக்கலி கொட்டிச் சிரிக்கின்றனர் குற்றவாளிகள். இது ஏதோ பீகார் போலீசுக்கே உரிய தனிப்பண்பு அல்ல. நாடுமுழுவதுமுள்ள காக்கிச் சட்டை கயவாளிகளின் பொதுப் பண்பு; அடக்குமுறைக்குள்ளான மக்கள் இனியும் நீதிக்காக காத்திருப்பதில் பலனில்லை. குற்றவாளிகளை தாமே அணிதிரண்டு தண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

● மணி



படிப்பகம்

www.padippakam.com

# சாதிய மோதல்- போலீஸ் வெறியாட்டம்

கடலங்குடி, கும்பகோணத்திலிருந்து 18 கி. மீ. தூரத்தில் கும்பகோணம்—பூந்தோட்டம் சாலை மார்க்கத்தில் உள்ளது. கடலங்குடியில் வன்னியர்கள் அதிகம். அருகில் உள்ள கடமங்குடி கிராமத்தில் முக்குலத்தோர் அதிகம். கடமங்குடி பேருந்து நிறுத்தமும் சாலை மார்க்கத்தில் உள்ளது. இந்த சாலை மார்க்கத்தில் 41 என்ற சோழன் பேருந்து கழகத்தைச் சேர்ந்த டவுன் பஸ் செல்கிறது. இதில் கோவிந்தராஜ் என்ற வன்னியர் ஓட்டுனராக இருக்கிறார். இவர் வன்னியர் சங்கத்தின் தீவிரப் பிரியர். அக்கினிக் குண்டம் பொறித்த பனியனுடன் பஸ்ஸில் செல்வார்.

பொங்கல் 'திரு'நாள் நடந்த முதல் வாரத்தின் முன் பகுதியில் ஓட்டுனர் கோவிந்தராஜ் தன்னுடைய பேருந்து 41ஐ ஓட்டிச் சென்றார். கடமங்குடி நிறுத்தத்தில் இறங்கிய ஒருவரிடம் 'டிக்கட் வாங்கியாச்சா' என்று கேட்டார். 'எங்கிட்ட பாஸ் இருக்கு; உன் வேலையைப் பாருடா' என அவர் கோபமுடன் கூறினார். இதனால் இருவருக்கும் வாய்த் தகராறு முற்றியது. உடன் இருந்த கடமங்குடி முக்குலத்து சாதிய இளைஞர்கள் அப்பயணியுடன் இணைந்து கொண்டனர். ஓட்டுனரை தாக்க முற்பட்டனர். அவர் ஒரு வன்னியர் என்பதும், வன்னியர் சங்க பிரியர் என்பதும் கோபத்திற்கு முதல் காரணமாக அமைந்தது.

இச்செய்தி அறிந்த கடலங்குடி வன்னிய இளைஞர்கள் 'நம் சாதிக்காரன் தாக்கப்பட்டான்' என்று சூடேற்றி முக்குலத்தோர் சாதியைச் சேர்ந்த கடமங்குடி வாசிகளைத் தாக்க தயாரானார்கள்.

மாட்டுப் பொங்கல் அன்று மாலை கடலங்குடி வன்னிய இளைஞர்கள் குடித்து விட்டு கடமங்குடியிலிருந்து 200 மீட்டர் தொலைவில் மேற்கே உள்ள வளைவு மதகு என்ற பஸ் நிறுத்தத்திற்கு அருகில் சத்தமிட்டும், கும்மாளம் அடித்தும் குழுமினர். இவர்களின் கலாட்டாவைக் காண கடமங்குடியிலிருந்து ஒருவர் ஓடிவந்தார்.

சிவாஜி என்ற இளைஞர் முக்குலத்தவர். ஓட்டுனர் கோவிந்தராஜை தாக்க முற்பட்டவர்களில் இவரும் ஒருவர். அவரை நோக்கி அரிவாளுடன் ஓடினார் பாலையா. (வன்னியர் சங்க அமைப்பாளர்) அரிவாளைத் திருப்பி பின்புறத்தால் சிவாஜியைத் தாக்கினார். மற்ற வன்னிய இளைஞர்களும் சிவாஜியைத் துரத்த அவர் திரும்பி ஓடினார். அப்பொழுது கும்பகோணத்திலிருந்து எரவாஞ்சேரி செல்லும் டவுன் பஸ் 4 வந்தது. அதில் ஓட்டுனராக இருந்தவர் கடமங்குடியைச் சேர்ந்த பன்னீர் (முக்குலத்தவர்) என்பவர். சிவாஜியைத் தாக்கிவிட்டு திரும்பியவர்கள் ஓட்டுனர் பன்னீரையும் தாக்க முற்பட்டனர்.

பஸ் பயணிகள் பயத்தில் சிதறி ஓடினர். பஸ் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டது. பன்னீர் போலீசில் புகார் செய்தார். பேருந்தைநொறுக்கியவர்கள்போலீசிடம் அகப்படாமல் இருக்க கழனி காட்டுக்கு சென்று விட்டனர். கடலங்குடியில் உள்ள (மேலத்தெரு) அனைத்து குடும்பங்களில் உள்ள ஆண்களிடம் இரவு தலைமறைவாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இதற்கு இணங்கி சிலர் இரவு வயல்களில் சென்று தங்கினர். பலர் வீடுகளில் இருந்தனர். போலீசு வந்தது. அவர்கள் 8 பேர்கள் இருப்பார்கள். மேற்கிலிருந்து ஒவ்வொரு வீடாக புகுந்தனர். போலீசு அதிக போதையில் இருந்தது குறிப்பிடத்தக்கது. கிடைத்தவர்களை தடியால் அடித்துத் தாக்கினர். தனபால் என்னும் முன்னாள் இராணுவ வீரர் வீட்டில் புகுந்தனர். அவரை கைது செய்ய முற்பட்டனர்.

தனபால், தனக்கும் பஸ் தாக்கப்பட்டதற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று கூறினர். உண்மையும் அதுவே. போலீசால் தாக்கப்பட்டவர் அனைவரும் இந்நிகழ்ச்சியில் தலையிடாதவர்கள். ஆனால் போலீசார் அவரை இழுத்துச் செல்ல முற்பட, அவர் வர மறுக்க போலீசார் அவரைத் தாக்கினர். தாக்குதலைத் தாங்க முடியாத தனபால் திருப்பித் தாக்க முற்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த போலீசார் மிகக் கடுமையான முறையில் தனபாலைத் தாக்கினார்கள். எனவே தனபால் கூச்சலிட ஆரம்பித்தார். அருகில் இருந்த (வீடுகள் அருகருகே) அவரது சகோதரர்கள் இதனைக் கண்டனர். ஆத்திரத்தில் அவர்கள் அருகில் வைக்கப்பட்டிருந்த உலக்கையால் போலீசாரைத் தாக்கினர். அனைத்து போலீசாரும் பலத்த அடியுடன் அங்கங்கே விழுந்தனர்.

தனபால் குடும்பத்தாரும் அவருடைய சகோதரர்கள் குடும்பத்தாரும் இரவிலேயே ஊரை விட்டு வெளியேறினர். தனபாலைத் தூக்கிச் சென்றனர்.



பஸ் உடைக்கப்பட்டதற்காக போலீசிடம் இருந்து தப்புவதற்காக வீட்டில் எரியும் மின் விளக்குகளின் டிரான்ஸ்பார்மர் நிறுத்தப்பட்டது. ஆனால் சாலை விளக்குகள் அணையும் முன்னரே போலீசார் தாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. நிறுத்தப்பட்ட சாலை விளக்கு சிறிது நேரத்தில் எரியத் தொடங்கியது.

இந்நிகழ்ச்சிக்குப் பின் இரவே ரிசர்வ் போலீசும் வந்தது. ஒவ்வொரு வீடாக புகுந்தனர். கிடைத்தவர்களைப் பிடித்தனர். வீட்டில் உள்ள சாமான்கள், ரேடியோ, சுவர் கடிகாரம் முதலியற்றை அடித்து நொறுக்கினர்.

தனபால் வீட்டிலும் அவரது சகோதரர் வீட்டிலும் புகுந்தனர். யாரும் வீட்டிலில்லை. வீட்டில் உள்ள சாமான்களை அடித்து நொறுக்கினர். தனபாலின் ராணுவ



படிப்பகம்

www.padippakam.com

சர்ட்டிபிகேட்டை கைப்பற்றினர். அவர் வீட்டிலிருந்த 50 பவுன் நகை சூறையாடப்பட்டது. இதுபோல் பல வீடுகளை அடித்து நொறுக்கினர். ஊரிலிருந்த ஆடு மாடுகளை அவிழ்த்து வயல் பகுதிகளில் விரட்டி விட்டனர். பெண்களை கைது செய்ய ஒரு இடத்தில் கும்பலாக உட்கார வைத்திருந்தனர். பெண்களை ஏதாவது செய்தால் விபரீதம் நடக்கும் என வன்னியர் சங்க பொறுப்பாளர்கள் அறிவித்ததனால் பெண்களை எதுவும் செய்யவில்லை.

போலீசார் தங்களுக்குத் தேவையான ஆடுகளை கடலங்குடியிலிருந்து தூக்கிச் சென்றுள்ளனர். கிடைத்த, நிகழ்ச்சிக்கு சம்மந்தம் இல்லாத, நபர்கள் 23பேரை கைது செய்துள்ளனர். இவர்களில் ஒரு தமிழாசிரியர், ஒரு கிராம நிர்வாக அலுவலர், ஒரு எல். ஐ. சி. அலுவலர், கல்லூரி மாணவர் ஒருவர், மேல்நிலைப் பள்ளி மாணவர் ஒருவர். இவர்களும் மற்றவர்களும் கடுமையான முறையில் குடவாசல் போலீஸ் ஸ்டேஷனில் வைத்துத் தாக்கப்பட்டனர். பின் கிராம நிர்வாக அலுவலர் விடுவிக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட மற்றவர்களை யாரும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. உணவுப்பொட்டலங்களை ஜன்னல் வழியே போட வேண்டும் என உறவினர்களிடம் நிர்பந்தித்தனர்.

தாக்கப்பட்ட போலீசாரில் ஒருவர் இறந்துவிட்டார். மற்றவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்கப்பட்டதனபால் இப்பொழுது நடக்க முடியாத நிலையில்இருக்கின்றார், தலைமறைவாக. தற்பொழுது கடலங்குடி கிராமத்தில் ஆண்களே இல்லை. அனைவரும் தலைமறைவாகி இருக்கின்றனர். அப்பாவிகள் பிடிபட்டுள்ளனர்.

போலீசாரை தாக்கியது திட்டமிட்டு செய்ததாகவும், இதற்காக மின் விளக்குகள் அணைக்கப்பட்டிருந்ததாகவும், கிராம மக்கள் அனைவரும் ஒரு வீட்டில் குழுமி இருந்து போலீசாரைத் தாக்கியதாகவும் போலீசார் தங்கள் ரிப்போர்ட்டில் கூறியுள்ளனர். கடலங்குடி வாசிகளை பூண்டோடு ஒழித்துவிடும் எண்ணத்துடன் போலீஸ் துணையுடன் முக்குலத்தோர் செயல்படுகின்றனர்.

சாதிய வெறியூட்டி காழ்ப்புணர்ச்சியை விதைத்து, உழைக்கும் மக்களின் நெஞ்சங்களை குப்பைத் தொட்டியாக்கி தேவையான போது அதை பற்றவைத்து குளிர் காய்கிறார்கள். இக்குப்பைகளை சுமந்துவரும் கழிசடைகளை, சாதிய வெறியர்களை, அதன் தலைவர்களை, இதற்கு துணை போகும் கும்பல்களை உழைக்கும் மக்கள் ஒன்று திரண்டு விரட்டியடிக்காத வரை இதற்கு விமோசனம் இல்லை.

● கபிலன்

சிவவிடுதி கிராமம். தஞ்சை மாவட்டம் திருவோணம் ஒன்றியப் பகுதியிலுள்ள சிறு கிராமம். அறியாமையும், ஏழ்மையும் பய உணர்ச்சியும் கொண்ட இக் கிராம மக்களின் பலவீனத்தையே தனது மூலதனமாகக் கொண்டு, இக்மக்களை பல்வேறு வழிகளில் சுரண்டி கொழுத்து அடக்கி வரும் ஒரு கொடுங்கோலன் பெயர் கோவிந்தராசு. தொழில்: திருவோணம் ஊராட்சி மன்ற உதவிப் பெருந்தலைவர்.

இவர், 1972 வாக்கில் காங்கிரசு கட்சியில் இருந்தார். அப்போது இந்திய உணவுக் கழகம் கழகம் (FCI) ஏஜெண்டாக இருந்து பெருவாரியாக அரசு பணத்தில்நெல் கொள்முதல் செய்து உணவுக் கழகத்திற்கு அனுப்பாமல் தானே திருட்டுத்தனமாக வெளிமாநிலங்களுக்கு கடத்தி விற்று லட்சக் கணக்கில் அரசாங்கத்தை மோசடி செய்தவர்.

10,000 மூட்டை நெல் கிடங்கில் இருப்புள்ளதாக கணக்குக் காட்டி நெல் மூட்டைக்கு பதிலாக 10,000 மூட்டை தவிட்டை அடுக்கி வைத்திருந்தார். இந்த மோசடியை அந்த ஊர் திமுக கிளைச் செயலாளராக இருந்த ஆர். வி. ராமசாமி என்பவர் அரசுக்கு புகார் செய்ய, அரசு இவரது மோசடியை கையும் களவுமாக பிடித்து ஜப்தி செய்து வழக்கு தொடுத்தது. வழக்கு இன்னும் கிடப்பில் இருக்கிறது.

புகார் செய்த ஆர். வி. ராமசாமி என்பவரை 1978 வாக்கில் கொலை செய்து விட்டு "ஊரை விட்டு ஓடிப் போய்விட்டான்" என்று தந்திரமாக ஊர் மக்களை ஏமாற்றியவர். இக்கொலை வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்ள திமுக ஆளும் கட்சியானவுடன் அதில் இணைந்து கொண்டார்.

1974ல் நடந்த திருவோணம் ஊராட்சி மன்ற தேர்தலில் பெருந்தலைவர் பதவிக்கு இவர் போட்டியிட்டபோது, தனது சாதிப் பெயரைச் சொல்லி தேர்தல் நிதியாக சாதிக்காரர்களிடம் 3 லட்ச ரூபாய் நிதி திரட்டிக் கொண்டார். இந்தப் பணத்தில் குறிஞ்சி என்ற ஊரில்



6 வேலி பண்ணை ஒன்றும் லாரி ஒன்றும் வாங்கிக் கொண்டார்.

மதுரை யாதவ கல்லூரிக்கு இவர் இயக்குநராக பொறுப்பேற்றிருந்தபோது கல்லூரி நிர்வாகத்திற்கு தெரியாமல் போலி ரசீதுகள் மூலம் உறுப்பினர் சேர்த்து தலா ரூ. 250 வசூலித்து லட்சக் கணக்கில் மோசடி செய்தவர்.

இக்கிராமத்தில் T. 1739 விவசாய சேவை கூட்டுறவு சங்கம் ஒன்றுள்ளது. இதற்கு 'திருவாளர்' கோவிந்தம்தான் தலைவராக இருந்தார். இச் சங்கத்தைச் சேர்ந்த கிராமங்களில் உள்ள பெரும்பாலான விவசாயிகளின் பெயரில் அவர்களுக்குத் தெரியாமல் சுமார் 7 லட்சம் ரூபாய் பினாமியாக சுருட்டிக் கொண்டார். இக் கடன்களுக்கு வட்டியாக மட்டும் ரூ. 6 லட்சம் இப்போது அந்த அப்பாவி விவசாயிகள் கட்ட வேண்டும் என நோட்டீசு வந்துள்ளது.

சிவவிடுதியைச் சேர்ந்த ரெ. ஆஸ்வதி, மு கருப்பையாகோனார் இப்படி எட்டு பேர் மட்டும் 70,000 ரூபாய்க்கு இப்போது கடனாளிகள். சமீபத்தில் கூட காளை மாட்டுக் கடன் என்ற பெயரில் 10 பேர்கள் பெயரில் தலா ரூ. 3000 வீதம் 30,000 ரூபாய் சுருட்டிக் கொண்டுள்ளார்.

சமீபத்தில் நடந்த பஞ்சாயத்து தேர்தலில் இவர் போட்டியிட்டபோது "எனக்கு ஓட்டு போட்டிங்கனா சேர்மனா வந்து சம்பாதிச்சு உங்க பேர்ல வாங்கிய கடனை கட்டுவேன். இல்லேன்னா நீங்கதான் கட்டணும்" என்று மிரட்டியே ஓட்டு வாங்கியவர். வெற்றி பெற்றவுடன் தி.மு.க.விலிருந்து அ.தி.மு க.வுக்கு மாறி பாதுகாப்பாக இருப்பவர்.

இவர், கிராம கூட்டுறவு சங்க கடையில் கொடுக்கப்படும் அரிசி, 'பாமாயில்', 'சீனி'யையும் விட்டு வைப்பதில்லை. அச்சங்க செயலர் எஸ். எம். கோவிந்தராஜ் என்பவரை கையில் போட்டுக்கொண்டு வருவதை அப்படியே விழுங்கி ஏப்பம் விடுவதில் 'சூரப்புலி'.

இவருக்கு ஒரு அண்ணன்; பெயர் முத்துசாமி. ஊரில் உள்ள புறம்போக்கு நிலம் அனைத்தையும் பினாமி பெயரில் ஆண்டனுபவித்து வருவதுதான் இவர் வேலை. இக் கேடிகளைப் பற்றி ஊர் மக்கள் அரசுக்கு மனுமேல் மனு போட்டது தான்மிச்சம். சர்வகட்சி ஆதரவுடன் இக் கொள்ளை கும்பல் இன்னும் பெரு மதிப்புடன் 'வீதி உலா' வந்து கொண்டுதான் இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் கைகளாலேயே இக் கொள்ளைக் கும்பலுக்கு தண்டனை வழங்காத வரை, அக்கூட்டம் விரவி பரவி வேர்விட்டுக் கொண்டுதான் இருக்கும்.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி.
திருவோணம் ஒன்றியம்.

படிப்பகம்

www.padippakam.com

# நாடாளுமன்ற ரௌடித்தனம்

ஜனவரி 23ஆம் தேதி தமிழக சட்டமன்றத்தில் நடந்த ரௌடித்தனத்தால், நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு ஏற்பட்டு "வடு" ஆறும் முன்பே, முப்பது நாட்களுக்குள் திரும்பவும் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு பலத்த அடி. எதிர்தரப்பு ஒட்டுச்சீட்டு அரசியல் கட்சிகள், வழக்கம்போல இதற்கும் கூட்டாக ஒரு ஒப்பாரி ஏற்பாடு செய்து "வரலாறு காணாத சம்பவம்" என்ற துயரம் நிறைந்த பாடலை மீண்டும் ஒருமுறை கூட்டாக இசைத்து தங்கள் துக்கத்தை பகிர்ந்து கொண்டன.

இந்தமுறை, நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு விழுந்தஅடியால் அதன் முகமே விகாரமாகி விட்டது.

பிப்ரவரி 22, இந்திய அரசின் துணைத்தலைவர் தலைமை தாங்கும் ராஜ்யசபையில், நாட்டின் உச்சபட்ச உயர்ந்த அதிகார மட்டமான இந்தியப் பிரதமர், அவரது மந்திரி பிரதாணிகள் குழுமியிருக்க சபை அலுவல் வழக்கம்போல் துவங்கியது. ஏற்கனவே எழுதிக் கொடுக்கப்பட்ட கேள்விகள்—தயாரித்து வந்த பதில்கள் என்ற ரீதியில் சபை அலுவல்கள் 'ஜனநாயக' முறைப்படி நடந்து கொண்டிருக்கும்போது, தெலுங்கு தேச கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவரும் நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சி தலைவருமான உபேந்திரா, சிறப்பு பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

தம்கட்சி அரசாளும் ஆந்திர மாநிலத்தின் கவர்னராயிருக்கும் காங்கிரசு கட்சியின் குமுத்பென் ஜோஷி, ஒதுக்கீட்டுக்கு அதிகமாக கவர்னர் மாளிகை செலவுகள் செய்வதுபற்றியான விளக்கம் கோரும் பிரேரணை அது. அவைத் தலைவர் சங்கர்தயாள் சர்மா பிரேரணையை அனுமதித்தார். தூங்கிக் கொண்டிருந்த காங்கிரசு உறுப்பினர்கள் அனைவரும், சிலிர்த்துக் கொண்டு எழுந்தார்கள்.

பிரேரணைக்கு அனுமதி அளித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து ஏக கூரலில் காட்டுக் கூச்சல் எழுப்பினார்கள். "கவர்னரின் செலவுகள் பற்றி இங்கு கேள்வி எழுப்ப உரிமையில்லை" என்று கும்பலாக எழுந்து நின்று கத்தினார்கள். "அனுமதி இல்லாமல் அவையில் எழுந்து பேசுவதை அனுமதிக்க முடியாது" என திரும்ப, திரும்ப அவைத் தலைவர் அடக்கியும், காங்கிரசு எருமைமாடுகள் அசைந்து கொடுப்பதாயில்லை. மூலைக்கு ஒன்று என்று கத்திக்கொண்டிருந்த காங்கிரசு எருமைகள் மொத்தமாக எழுந்து கத்த ஆரம்பித்தன. நிதி, விவசாய அமைச்சகத்தின் மந்திரிகளாய் இருக்கும் என்டி. திவாரி, பஜன்லால் போன்ற கிழட்டு எருமைகளும், உள்துறை அமைச்சகத்தின் துணை மந்திரியாய் இருக்கும்பொலி எருது சிதம்பரமும் ஒன்றாய் சேர்ந்துக் கொண்டு சோம்பி இருந்த மற்ற காங்கிரசு எருமைகளை உசுப்பிவிட்டன.

"கவர்னரின் செலவுகளை சட்டமன்றம்தான் விவாதிக்க முடியும். இங்கு அதை விவாதிக்க அனுமதிக்க கூடாது" என்று சட்ட விதிகளை சுட்டிக்காட்டி அவைத் தலைவரை மிரட்டிப் பார்த்தன. "மத்திய அரசின் சட்டவிதிகளின் மூலமாகத்தான் கவர்னர்களின் செலவுகளுக்கான வரையறைத் தீர்மானிக்கப் படுகிறது. எனவே இவற்றின்வழி காட்டுதல்கள் மீறப்படும்போது, அதைப்பற்றி விவாதிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முழு உரிமையும் உண்டு!" என்று எருமை மாடுகளுக்கு பதிலடிக் கொடுத்தார், பிரேரணை எழுப்பிய உபேந்திரா. எந்த அடியும் காங்சிரசு எருமைகளுக்கு உரைக்கவில்லை.

பொலி எருது சிதம்பரம் அடங்கவே இல்லை. விவாதத்தை, விதண்டாவாதமாக்கி குறைந்த பட்சம் சபையை ஒத்தி வைப்பதிலாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என, பிரேரணைக்கு சம்மந்தமே இல்லாத கேள்விகளை எல்லாம் எழுப்பி அவைத்தலைவருக்கு எரிச்சல் ஊட்டினார்.

திருமதி. பிரதீபா பாட்டீல் என்ற காங்கிரசு கட்சியைச் சேர்ந்த அவையின் துணைத்தலைவரும் பொலி எருது சிதம்பரத்துடன் அவைத்தலைவரை நக்கல் செய்து ரசித்தார். "உங்கள் அறைக்குள் சென்று நீங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு வருவது நல்லது" என்று நையாண்டி செய்தார்.

இதையெல்லாம் கண்டு 'வேதனை' அடைந்த எதிர்க்கட்சிகள், அரசுத் தலைவரின் மதிப்பு இப்படி மாசுபடுத்தப்படுகிறதே என கண்ணீர்விட்டு கலங்கி அழுதார்கள். பிரேரணை கொண்டு வந்த உபேந்திரா, அரசுத் தலைவருக்குஇழுக்கு நேருவதை தடுக்கும் பொருட்டு, சிறப்பு பிரேரணையைவாபஸ் வாங்கிக் கொண்டார். அவைத் தலைவரும் விட்டால் போதும் என்று சபையை ஒத்திவைத்துவிட்டு ஓடிவிட்டார்.

காங்கிரசு கும்பலின் இவ்வளவு பொறுக்கித்தனங்களையும் கண்ணாரகண்டு ரசித்துக் கொண்டிருந்தார். பாரத பிரதமர் ராஜீவ்காந்தி. அதுமட்டுமல்ல, பொறுக்கிகளோடு ஒரு பொறுக்கியாக சேர்ந்துக் கொண்டு, அந்த ரௌடித்தனங்களுக்கிடையில் புகுந்து சூடேற்றினார். ரௌடிதனத்திற்கு மத்தியில் அடிக்கொருதரம் சிதம்பரம் இவர் காதுக்கருகில் வந்துபேசி அனுமதி வாங்கி சென்றார். திமுக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வை. கோபால்சாமி நேரிடையாக இதை சுட்டிக்காட்டி அவையிலேயே அம்பலப்படுத்தி இருக்கிறார். ஆனால், அப்பொறுக்கி கும்பலின் ரௌடித்தனத்தை எதிர்த்து முறியடிக்க வேண்டும் என்ற சொரணை மட்டும் எந்த மாண்புமிகுகளுக்கும் எழவில்லை.

ஆந்திர மாநிலத்தின் கவர்னராயிருக்கும் குமுத்பென் ஜோஷி





படிப்பகம்

www.padippakam.com




# புதைக்கப்படும் உண்மைகள் பூதமாகக் கிளம்பும்!

- வரலாற்றை மறைப்பது; வரலாறே இல்லாமல் செய்வது.
- வரலாற்றுத் தொகுப்பையே எதிர்ப்பது.
- வரலாற்றைத் திரித்துச் சொல்வது

—மூன்றுமே முக்காலத்துக்கும், தலைமுறை—தலைமுறைக்கும் எதிராகச் செய்யும் கிரிமினல் குற்றங்கள். மன்னிக்க முடியாத கிரிமினல் குற்றங்கள். மரண தண்டனைக்குரிய கிரிமினல் குற்றங்கள். நாற்பது ஆண்டுகளாக நாட்டை ஆண்டு வருபவர்கள்தான் இம்மூன்று கிரிமினல் குற்றங்களையும் செய்து வருகிறார்கள்.

ஒருமுறை, இரண்டுமுறை மட்டுமல்ல. அதிகாரத்திலிருப்பவர்கள் தொடர்ந்து இந்தக் கிரிமினல் குற்றங்களைச் செய்து வருகிறார்கள் என்கிற உண்மை இப்பொழுதுதான் பரவலாகத் தெரியத்தொடங்கி இருக்கிறது. மௌலானா அபுல்கலாம் அசாத்— காலனிய ஆட்சியின்போது மூன்று முறை காங்கிரசுத் தலைவராக இருந்தவர். 1947 அதிகார மாற்றத்திற்கு முன்பு காலனிய ஆட்சியாளர்களுடன் காங்கிரசு தலைவர் என்கிற முறையில் பேச்சு வார்த்தை நடத்தியவர். நேரு பட்டேல், போன்றவர்களுக்குச் சமமானவர். நாட்டுப் பிரிவினையைக் கடுமையாக எதிர்த்தவர். 1958வரை மத்திய அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்தவர். "இந்தியாவின் விடுதலை வெற்றி" என்ற தலைப்பில் அவர் சுயசரிதை எழுதினர். அதன் பதிப்பக உரிமையை "ஓரியண்ட் லாங்மேன்" என்கிற ஆங்கிலேயப் புத்தக நிறுவனம் பெற்றுள்ளது. புத்தகத்தை வெளியிடும்போது, அந்த வரலாற்றின் ஒரு முப்பது பக்கங்களை மட்டும் நிறுத்திவிட்டு வெளியிட ஏற்பாடு செய்தார்.

அந்த முப்பது பக்கங்களையும் ஒரு உறையில் போட்டு மூடி, சீல் வைத்து அவர் இறந்து முப்பது ஆண்டுகள் கழித்து திறந்து பார்த்து வெளியிட வேண்டும் என்றும் அதற்கான உரிமை ஓரியண்ட் லாங்மேன் புத்தக நிறுவனத்துக்கு வழங்கி விட்டும் போய்விட்டார். கடந்த பிப்ரவரி 22ந்தேதியுடன் கெடுமுடிகிறது. மௌலானா ஆசாத் சுயசரிதையின் அந்த முப்பது பக்கங்கள் தேசிய ஆவணக்காப்பகத்தில் இரும்புக் கம்பி போட்ட தனி அறையின், இரும்புக் பெட்டியில் வைத்து கனமான பூட்டுப் போட்டுள்ளது. மௌலானா ஆசாத்தின் செயலாளராகவும்மத்தியமந்திரியாகவும் இருந்த ஹுமாயூன் கபீர் கையெழுத்துப் பிரதியாக எழுதி, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்தவர்,

பிப்ரவரி 22ந்தேதி மத்திய கல்வி கலாச்சார மந்திரி எல்.பி. சாஹி முத்திரையை உடைத்து அந்த முப்பது பக்கங்களை வெளியிடுவதாகவும், ஓரியண்ட் லாங்மேன் புத்தக நிறுவனம் அவற்றைப் பதிப்பிக்க மறுத்தால் தேசிய ஆவணக்காப்பகமோ, தேசிய நூலகமோ (மத்திய அரசு நிறுவனங்கள்) வெளியிடும் என்றும் இரண்டு நாட்களுக்கு முன்பு அரசு அறிவித்தது.

ஆனால் ஹுமாயூன் கபீரின் மகள் லைலா கபீரும், மௌலானா ஆசாத்தின் தங்கை வழி பேத்தியும் காங்கிரசின் பொதுச் செயலாளராகவும் உள்ள நஜமா ஹெப்துல்லாவும் சேர்ந்து அந்த முப்பது பக்கங்களுக்கு உரிமை கோரி வழக்குப் போட்டுள்ளனர். அவற்றை வெளியிட உரிமைக்கோரி கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் எதிர்வழக்காடி ஓரியண்ட் லாங்மேன் புத்தக நிறுவனம் வெற்றி பெற்றுவிட்டது. ஆனாலும் டெல்லி உயர்நீதி மன்றத்தில் மற்றொரு வழக்கு போட்டு வெளியிடுவதை நிறுத்திவிட்டார் நஜமா ஹெப்துல்லா.

ஏன்? மௌலானா ஆசாத் சுயசரிதையில் நிறுத்தி வைக்கப்பட்ட 30 பக்கங்களில் என்ன இருக்கின்றன என்கிற இரகசியத்தை அறிந்த மௌலானா, கபீர் இரண்டு பேருமே இறந்து விட்டார்கள். காங்கிரசுத் தலைவர்களின் துரோகங்கள் பற்றிய உண்மைகள் அவற்றில் இருக்குமோ என்று ஆட்சியிலுள்ளவர்கள் பதறிப் போய் விட்டார்கள். முக்கியமாக, கடைசி வைசிராய்மவுண்பேட்டனின் மனைவிக்கும்நேருவுக்கும் இருந்த இரகசியஉறவு, அதைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியாவைப் பிளப்பதற்கு நேருவை உடந்தையாக்கியது இருக்கலாம்; அல்லது காங்கிரசு தலைவர்களில் பலர் பிரிவினைக்கு உடந்தையாக இருந்ததும், தேச துரோகங்கள் செய்ததும் பற்றிய விவரங்கள் இருக்கலாம் என்று அவர்களின் வாரிசுகள் அஞ்சுகின்றனர். எனவே நஜமாவையும், லைலாவையும் தூண்டிவிட்டு உண்மைகளை அமுக்கிவிட முயலுகிறார்கள்.

மௌலானாவின் சுயசரிதையில் மறைந்திருக்கும் இரகசியம் என்னவோ தெரியாது!

இதற்கு மேல் அவை வெளிவர, காங்கிரசு துரோகிகளின வாரிசுகள் சிதைக்காமல் வெளியே வருவதற்கு விடுவார்களா என்பதும் தெரியாது! ஆனால் இந்த நாட்டு மக்கள் வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ளக்கூடாது எனபதில் மட்டும் அதிகாரத்திலிருப்பவர்கள் எப்போதும் குறியாக இருந்து வந்திருக்கிறார்கள். இதற்காக பல ஆவணங்கள் அழிக்கப்படுகின்றன. அல்லது அரசாங்கக் கிடங்குகளிலே செல்லரித்துப் போகின்றன; வெளியே விடுவதில்லை.

ஆவணக்காப்பாக விதிப்படி ஒரு சம்பவம் நடந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு அது சம்பந்தமான எல்லா அரசாங்க ஆவணங்களும் காப்பகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இதைச் சட்டமாக்கும்படி ஆவண காப்பக



படிப்பகம்

www.padippakam.com

விதிகளுக்கான கமிட்டி சிபாரிசு செய்தது. சட்டமாக்கும் மசோதா வந்தபோது நாடாளுமன்றத்தில் தோற்கடிக் கப்பட்டு விட்டது. ஆவணக் காப்பக விதிகளின்படி 21 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் எவரும் அவற்றைப் பார்கக அனுமதி உண்டு.

ஆனால் அதிகாரமாற்றம் நடந்த 40 ஆண்டுகளாகி யும், பல சம்பவங்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அரசியல்வாதிகளும், அதிகார வர்க்கத்தினரும், இரக சிய உளவுப் படையும் ஆவணக் காப்பகத்துக்குஅனுப்ப மறுக்கின்றனர். "பூதம்" போலிருந்து அந்த இரகசி யங்களைக் காக்கின்றனர். இவர்கள் தணிக்கைசெய்து வெளியிடும் ஆவணங்களைக் கொண்டுதான் இந்திய வர லாறே எழுதப்படுகிறது! குறிப்பாக தேசிய விடுதலைப் போர், காங்கிரசின் பாத்திரம், பிரிவினை பற்றிய ஆவ ணங்கள் அனைத்துமே வரலாற்று ஆசிரியர்களிடம்கூட காட்டப்படுவதில்லை.

ஆங்கிலேய அரசு அவ்வப்பொழுது வெளியிடும் ஆவணங்களைக் கொண்டுதான் இந்தியாவைப் பற்றிய உண்மைகளை இந்தியர்கள் அறிந்து கொள்ள முடியும் என்கிற வெட்கக்கேடான நிலைமை. உதாரணமாக போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் டாங்கே ஒரு பிரிட்டிஷ் உளவாளியாக இருந்தார் என்பதை ஆங்கிலேயரின் ஆவணங்களில் இருந்துதான் அறிய முடிந்தது. காந்திய ஆபாச வக்கிர வாழ்க்கை பற்றி ஆஸ்தர் கேயெஸ்ட்லர் எழுதிய "தாமரையும் இயந்திர மனிதனும்" என்கிற புத் தகம் பல உண்மைகளைச் சொன்னது.

காங்கிரசு மற்றும் பிற கட்சிகளின் தலைவர்கள் பற் றிய அரசியல் இரகசியங்கள் அடங்கிய ஆவணங்கள் கல்கத்தாவிலுள்ள இரகசியப் புலனாய்வுப்படை அலு வலகத்தில் இருந்தன. அவை"ஆபத்தான" தகவல் களைக் கொண்டிருப்பதால் வெளியிட முடியாது என்று போலீசாரும் உளவுப்படையினரும் மறுக்கின்றனர். காலனிய அரசும், அதிகார மாற்றத்துக்கு முன்னும் பின் னும் சேகரிக்கப்பட்ட உளவுத்தகவல்கள் தேசிய ஆவணக் காப்பகத்தில் வைக்கும் உரிமைமறுக்கப்படு கிறது. சுபாஷ் சந்திரபோஸ் மற்றும்அவருடைய இந்திய தேசியப் படையும் பற்றிய ஆவணங்கள் 45 ஆண்டு களுக்கு மேலாகியும் காப்பகத்திடம் ஒப்படைக்கப்பட வில்லை. 1904இல் திபேத்தில் சுற்றுப்பயணம் செய்த தளபதி ஃபிரான்சிஸ் யங்ஹஸ்பண்ட் பற்றிய ஆவணங் கள் இந்திய—சீனப்போருக்குப் பிறகு மறைக்கப் பட்டுள்ளன.

# 'சுதந்திர' நாட்டின் அடிமைகள்!

"சூத்திரரும் பெண்களும் அடி மைகள். ஆடு மாடுகளோடு பட்டியில் அவர்களை வைக்க வேண்டும்" — வேதசாத்திரங்கள் இப்படித்தான் சொல்கின்றன. அதெல்லாம் அந்தக்காலம், இந்தக் காலத்தில் யார் வித்தியாசம் பார்க்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வரும் சரி, பெண்களும் சரி எல்லோருக்கும் சமதையாக வேலை பார்க்கிறார்கள், சமூக அந்தஸ்து, கவுரம் எல்லாம் இருக் கிறது என்று சிலர் விதண்டவாதம் பேசுகிறார்கள்.

இரண்டு சம்பவங்கள், இரண்டு விதமான கொடுமைகள் நடந்திருக் கின்றன; இதே இந்தியாவில் கடந்த இருமாதங்களில் நடந்திருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர் மீதும்,பெண்கள் மீதும் அடக்குமுறைகள் தொடர்ந்து நடக்கின்றன என்பதற்கு அவை சாட்சிகள்.

●

கர்நாடக மாநிலம்—சாதி வெறி படர்ந்த பெல்காம் மாவட் டம். ஜனவரி 29 சந்திரப்பா என்றொரு அப்பாவி. தாழ்த்தப் பட்ட கூலி விவசாயி. அவரைக் கட்டி வைத்து அடித்தார்கள்; மலத் தில் தோய்த்த செருப்பைக் கடிக் கச் சொல்லி அவமானப்படுத்தி னார்கள்.

பெல்காம் மாவட்டத்தில் தாட் டூர் கிராமம். ஆயிரம்பேர் மட்டுமே வாழ்கிற குக்கிராமம். சந்திரப்பா என்ன தவறு செய்தார்? அவரது மனைவிக்காகப் பூஜை செய்ய முடியாது என்று மறுத்த கோயில் பூசாரியை எதிர்த்துக் கேள்வி கேட்டார். இதுமாபெரும் குற்றமாம். தாழ்த்தப்பட்டவன் தலை நிமிரு வதா? ஓர் அடிமை கேள்வி கேட் பதா?

அதே ஊரைச் சேர்ந்த ஜனதா கட்சி உள்ளூர்த் தலைவர்கள் (ரவுடிகள்) ரவிசங்கர் கவுடாவும், அர்ஜுனப்பாவும் பூசாரியோடு சேர்ந்து கொண்டு அடித்து உதைத்து பிறகு அடாத செயல் களைச் செய்து சந்திரப்பாவைக் கேவலப்படுத்தினார்கள்.சந்திரப்பா சும்மா விடுவதாக இல்லை. அடுத்த நாள் புகார் கொடுக்கத் தீர்மானித் தார். பெரும்பணம் படைத்த லிங்காயத்— மேல் ஜாதி நிலப் பிரபுக்கள் சும்மாவிட மாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். மானம் இழந்து நடுத்தெருவில் நிறுத்தப்பட்ட பிறகு இழப்பதற்கு இன்னும் வேறென்ன இருக்கிறது? அவரது கேள்வி நியாயஸ்தனின் கேள்வி. போலீசுக்குத் துணிந்து முறையிட்டார். கண்துடைப்புக்கு 11பேரைக்கைது செய்தது போலீஸ்; ஜாமீனில் அன்றே வெளியே வந்து விட்டார்கள்.

செய்தி எட்டியதும் தலித் (தாழ்த்தப்பட்டவர்) அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்கள் தொடங்கின, மக்களுக்காகக் கிராம அளவில் மண்டலப் பஞ்சாயத்துக்கள் என்று மினுக்கிய ஜனதாக்காரர்களை எதிர்த்து மைசூரில் மாணவர்கள் போராட்டம் தொடங்கினர். 'அரசு தலை குனிகிறது' என்று ஒற்றை வரியில் செய்தி சொன்ன கர்நாடக மாநிலப் பரிசுத்தம் ஹெக்டே தன் ஆட்களை அனுப்பிச் சமாளிக்கப் பார்த்தார்; மகஜர் கேலி செய்து அனுப்பினார்கள்.

இதுவரை எந்த நடவடிக்கை யும் இல்லை. கவுடாவின்மீது தீண்டாமைக் கிரிமினல் வழக்கு ஏன் தொடுக்கப்படவில்லை? செய் தால் மேல்சாதிக்காரர்கள் ஆட்சி யைக் கவிழ்த்து விடுவார்கள்.

கர்நாடக மாநிலத்தில் கீழ் வெண்மணி, பெல்ச்சி, பிப்ரா வரிசையில் அட்டூழியங்கள் நடக் கின்றன. தாட்டூர் சம்பவத்துக்குப் பிறகு, கானாபூர் கிராமத்தில் மேல்சாதி டீக்கடையில் டீ கேட்ட தற்காக ஒரு இளைஞன் வெட்டிக் கொல்லப்பட்டான். அட்டூழியம் அவமானம் மட்டுமா? அவர்கள் வாழ்வின் வேர்களை அறுத்தெறியும் வேலையும் திட்டமிட்டு நடத்தப்படு கிறது.மலநாடு பகுதியில் 60,000





படிப்பகம்

www.padippakam.com

பிரிட்டன், ஃபிரான்ஸ், டச்சு, போர்சுகீஸ், இத்தாலி, ருஷ்யா, இலங்கை, மலேசியா போன்ற வெளி நாடுகளிலிருந்து மதிப்பு மிகு ஆவணங்களை பெற முயலும் அதே சமயம் இங்குள்ள ஆவணங்களை ஒளித்து வைத்தும், போதிய நிதி ஒதுக்கிப் பாதுகாக்காமலும் இருக்கிறது இந்திய அரசு அரசாங்க இரகசியம் என்கிற முத்திரை குத்திவிட்டால் எந்த ஆவணத்தையும் தேசிய காப்பகத்துக்கு அனுப்பாமல் அரசே வைத்துக் கொள்ளும் ஏகபோக உரிமை பெற்றுள்ளது.

காலனிய ஆட்சியிலும் அதன் பின்னும் காங்கிரசுத் தலைவர்களும் அவர்களுடைய வாரிசுகளும் செய்து வரும் தேச துரோகக் குற்றங்கள் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் நிரந்தரமாக உள்ளன. அவசரநிலை ஆட்சியின்போது நேருவிண் பரம்பரைதான் இந்தியாவின் வரலாற்று நாயகர்கள் என்று பொய் மூட்டைகளை எழுதி "வரலாற்றுப் பெட்டகமாக" செங்கோட்டையில் புதைத்தார் இந்திரா. அதற்கு முன்பு பாண்டிச்சேரி ஊழலில் சிக்கிக் கொண்டபோது அது சம்பந்தமான கோப்புகளை சமர்ப்பிக்க மறுத்து விட்டார். ஜனதா ஆட்சிக்கு வந்த பிறகு வரலாற்றுப் பெட்டகம் தோண்டி எடுக்கப்பட்டு இந்திராவின் வரலாற்று மோசடிகள் அம்பலமாகின. அவசர நிலை ஆட்சிப் பிரகடனத்தை மந்திரிசபையிடம்கூட ஒப்புதல் வாங்கவில்லை என்கிற இரகசியம் அம்பலமானது! ராஜீவ்—ஜெயில்சிங் தகராறு, ஃபேர்ஃபாக்ஸ், போஃபார்ஸ் விவகாரங்களின்போது அரசாங்க 'இரகசியங்கள் என்று கூறி ராஜீவ் தனது கிரிமினல் குற்றங்களை மறைத்தார். எனவே இவர்களின் அயோக்கியத்தனங்கள் வெளியே தெரிந்து விடாமல் பாதுகாத்துக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறார்கள்.'

இதே போலத்தான் ருஷ்யாவை ஆண்ட ஜார் மன்னனும், அவனுக்குப் பின் வந்த இடைக்கால முதலாளித்துவ அரசும் இரகசியமாக பல ஆவணங்களைக் காத்து வந்தன. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு லெனினும் ஸ்டாலினும் அவற்றை வெளியிட்டு ருஷ்யா மற்றும் உலக நாடுகளுக்குப் பெருந் தொண்டாற்றினர். அதைப் போன்றதொரு புரட்சிக்குப் பிறகு அமையும் புதிய ஜனநாயக அரசின் கீழ் காங்கிரசு மற்றும் அதன் வாரிசுகளின் தேசதுரோகங்கள் முற்றாக அம்பலப்படுத்தப்படும் இவர்கள் ஒளித்து வைத்திருக்கும் இரகசியங்கள் பரந்துபட்ட மக்களுக்கு பகிரங்கமாக்கப்படும். ●

(அறுபதாயிரம்) ஏக்கர் நிலப்பரப்பில் அதிகமாக வாழும் தாழ்த்தப்பட்டவர்களை வெளியேற்றிவிட்டு அங்கே காபி தோட்டத் தொழிலுக்குத் தாரை வார்க்க ஹெக்டே அரசு திட்டமிட்டு வருகிறது.

பல்லாயிரம் சந்திரப்பாக்கள் கர்நாடகாவில் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

●

இடம், கான்பூர். உத்திரப் பிரதேச மாநிலம். கயாபிரசாத் சாகுவின் மத்தியதர வர்க்கக் குடும்பம். வரதட்சணைக்கொடுமை தாங்காமல் மணமாகாத மூன்று பெண்கள் தூக்குப் போட்டுக் கொண்டு விட்டார்கள். தங்கள் பெற்றோர் படும் துன்ப துயரங்களைப் பார்க்கச் சகிக்கவில்லை அவர்களுக்கு.



சாகு ஒரு எல் ஐ சி அதிகாரி. மூன்று வேளைச் சோறுசாப்பிட்டுக் கொண்டு வாழ்ந்த குடும்பம்தான். ஆனால் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி வாழ்ந்தார்கள். எதற்காக? பெண்களுக்கு வரதட்சணைக்குச் சேமிப்பிற்காக. தனது சொந்த வீட்டை ரூ 400க்கு வாடகைக்கு விட்டுவிட்டு நாற்றம்பிடித்த கூலி பஜாரில் இருட்டு அறைகளில் ரூ 60க்கு வாடகை பிடித்து ஏழு பேர் அடைபட்டு வாழ்ந்தார்கள்.

மூத்த பெண் பூனம். எட்டுப் பேர் வந்து பார்த்தார்கள். நாலு வருடங்களுக்கு முன்னால் 40,000 ரூபாயில் தொடங்கியவரதட்சணை ஏலம் இப்போது 80,000 ரூபாய்க்கு ஏறிவிட்டது. கடந்த டிசம்பர் 21 அன்று வந்தவன் ஒன்பதாவது ஆள். ரயில்வே கிளார்க். அவனுக்கும் இனிப்பு, காரம் என்று விருந்து கொடுத்தார்கள். அப்போது ஏப்பம் விட்டுவிட்டுப் போனவர்கள் தான்—பதில்கூடப் போடவில்லை.

அந்தப் பெண்கள் படித்தவர்கள். பூனம் எம் ஏ, தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்றுக்கொண்டாள். அடுத்த பெண்கள் எம்.ஏ பி ஏ., படிக்கிறார்கள். "படிப்பு எல்லாம் சொல்லிக் கொடுத்தேன், யார் அதைப் பார்க்கிறார்கள்? தேவை எல்லாம் எவ்வளவு பணம் தருவாய் என்பதுதான்"—உடைந்து போன சாகு குமுறி அழுது கொண்டே சொன்னார்.

வீட்டில் மூன்று பெண்கள் மட்டும் இருந்திருக்கிறார்கள். பெற்றோர்கள் வெளியே உறவினர் வீட்டு திருமணத்துக்குச் சென்றிருந்த நேரம். ஒரு குறிப்பு எழுதி வைத்துவிட்டுத் தூக்கில் தொங்கி விட்டார்கள் மூவரும். "அன்புள்ள அம்மா, அப்பாவுக்கு. நாங்களே முடிவெடுத்துச் செய்கிறோம். எங்களை மன்னித்துவிடுங்கள்!"

யாரை யார் மன்னிப்பது? அந்த இளம் பெண்கள்—மத்தியதர வர்க்க இலக்கணங்களை தற்கொலையால் (வேறுவழி தெரியாமல்) மீறிவிட்டதைக் குற்றமென்று எண்ணினார்களோ? "இந்தப் பாழும் தகப்பனால் அவர்களுக்குக் கல்யாணம் செய்ய முடியவில்லையே... நிரந்தர அவமானத்தோடு வாழும்படி விட்டுவிட்டுப்போய்விட்டார்களே!" என்று நெஞ்சம் கொதித்து அழுகிறாரே அந்தச் சாகு, அவர் சொல்வதுபோல அத்தனையும் அவரது குற்றமா?

இல்லை. எப்படியாவது மத்தியதர வர்க்க இலக்கணத்தை வாழ வைத்துவிடத் துடிக்கும் நிலப்பிரபுத்துவ ஆண் ஆதிக்க வெறியர்கள்தான் குற்றவாளிகள்; பெண்களை விலைபேச வந்த கும்பல் குற்றவாளிகள்; தங்களைச் சுற்றி இறுக்கிய சமூகத் தளைகளை அறுத்தெறியப் போராடுவதற்குப் பதில் கோழைத்தனத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்ட பெண்களை மன்னித்து விடலாம். ஆனால், பெண்களைச் சந்தைச் சரக்காக, கேவலமாக வரதட்சணை ஏலம்விடும் ஆண் ஆதிக்கச் சமுதாயத்தை யார் மன்னிக்க முடியும்?


● ● ●

தீண்டாமையை ஒழிக்க, வரதட்சணையைத் தடுக்க சட்டங்கள் இருக்கின்றன உண்மைதான். ஆனால் யார் நடைமுறைப்படுத்துவது? அந்த அதிகாரம் கவுடாக்களிடமும், 80,000 ரூபாய்வரதட்சணை பணம் கேட்கும் ஆண் ஆதிக்க வெறியர்களிடமும் இருக்கும்போது சட்டம் என்ன செய்யும்? நரியிடம் நாட்டாண்மை கொடுத்திருக்கும் காட்டு ஆட்சியில் சாதாரண ஆடுகளுக்கு எங்கே நியாயம் கிடைக்கும்? ●

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600015. அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம்பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு) சென்னை—600094.

படிப்பகம்

www.padippakam.com



பால் மணம் மாறாத இச்சிறுவர்கள் மரணத்தின் வாயிலிருந்து நாள் தோறும் நழுவிக்கொண்டிருப்பவர்கள். இருந்தும், சிறுவர்களுக்கே உரிய குறும்புணத்தோடு தினமும் கும்மாளமடித்துக்கொண்டுதான் மரணத்தின் வாயிலைக் கடக்கிறார்கள்.

ஒரிசா மாநிலத்து பல்ஷர், பலியஷாராகிராமங்களைச் சேர்ந்த இச்சிறுவர்கள் குறுக்கே ஓடும் தான்ஷி ஆற்றைக் கடந்தால்தான் பள்ளிக்கே செல்லமுடியும். இவர்கள், ஊரைக் கடந்து வெளி உலகம் செல்வதற்கு வேறு வழி இல்லை. ஆற்றைக் கடக்கப் பயந்தால், அதையே சாக்காக வைத்துக் கொண்டு பள்ளிக்கு அனுப்பாமல் வீட்டுவேலையில் இறக்கிவிடுவார்கள் பெற்றோர்கள். எனவே, உடுத்திவரும் துணி மணிகளையும் சுமந்து வரும் புத்தகங்களையும் சுருட்டி தலைக்கு மேலே வைத்துக் கொண்டு தட்டு தடுமாறி அரைகுறை நீச்சலில் ஆற்றைக் கடக்கிறார்கள். கரைச்சேர்ந்ததும் துணிகளை உடுத்திக்கொண்டு பள்ளியை நோக்கி திரும்பவும் நடையைக் கட்டுகிறார்கள். சிறிது ஏமாந்தால் புத்தகப்பை தொப்பையாகிவிடும். அதிகமாக விளையாடினால் பாதை தவறிவிடும்.

இதோ, இது 'ஏர் இந்தியா', 'இந்தியன் ஏர்லைன்ஸ்' என்ற இரண்டு விமான போக்குவரத்துக்கு பிறகு வந்திருக்கும் 'வாயுதூத்' என்ற புதிய விமானபோக்குவரத்து 'சர்விஸ்' இது.

மாநிலத் தலைநகரங்களுக்கு அடுத்த படியாக இருக்கும், பெரும் வியாபார மற்றும் தொழிற் நகரங்களுக்கும் பணமுதலைகள் விரைவாக சென்று தொழில் கவனிக்க அமைக்கப்பட்ட புது போக்குவரத்து. ஐந்து ஆண்டுகளுக்கு முன் அறிமுகப் படுத்தப்பட்டும் இன்னும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கும் மேலாக நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தேவையான பயணிகள் இல்லை. இருந்தும விடப்போவதில்லை, 'ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திற்குள் 85 நகரங்களுக்கு விரிவுபடுத்துவதே எங்களது குறிக்கோள்'' என மார்தட்டுகிறார்கள். பயணிகளை கவர்ந்திழுக்க 'அவ்ரா', 'டோனியர்' என்று பல மாடல்களில் புது விமானங்களை வாங்கிக் குவிக்க திட்டம் தீட்டி விட்டார்கள்.

பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப சாலை வசதி இல்லை. நகரங்களிலோ, ஆண்டு ஒன்றுக்கு 40, 000 மக்கள் சாலை விபத்தில் உயிர் இழக்கிறார்கள். 1.73 லட்சம் மக்கள் சாலை விபத்துக்களினால் உடல் ஊனமாகிறார்கள். 20, 000 கோடி ரூபாய் உடமைநாசம்ஏற்படுகிறது. கிராமப்புறங்களிலோ அறவே சாலை வசதி இல்லாமல், ஆயிரக்கணக்கான கர்ப்பிணி பெண்களும், நோயாளிகளும், பள்ளிச் சிறுவர்களும், காலம் தவறி மருத்துவமனைக்கு சென்றும், ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டும் இறந்து கொண்டிருக்கிறார்கள். அடிப்படை வசதிகோரி போராடும் மக்களுக்கோ துப்பாக்கி சூடு. ஆட்சி அதிகார தரகு முதலாளிகளுக்கும், பண்ணை பிரபுக்களுக்கும் அரசு பணத்தை விரயம் செய்து புதுப்புது வசதிகள்.

இந்த உதவாக்கரை, ஊதாரி ஆட்சி முறையை இன்னும் எத்தனை காலம்தான் கழுத்தொடிய சுமந்து கொண்டிருப்பது?



# இதுதான் இன்றைய இந்தியா

படிப்பகம்